உ

சிவமயம்.

# தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்"
'எண்ணித்துணிக கருமம்'
"எவ்வ துறைவ துலக முலகத்தொ-
டவ்வ துறைவ தறிவு"

C. N. அனந்தராமையை சாஸ்திரி M. A., பண்டிதர் S. முத்துசுவாமிப் பிள்ளை, பத்திராசிரியர்கள்.

தொகுதி V. } 1092 ஆனி, திருவனந்தபுரம்: JULY 1917. { பகுதி 5.

## பொருள் அடக்கம்.


| | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | மாதசரிதம் ... ... | 81 |
| 2. | சந்திரகுப்தசக்கிரவர்த்தி சரித்திரம் | 85 |
| 3, | இறந்தவர் வாய்திறந்தார் ... | 88 |
| 4. | ஆகாரமும் பானமும் ... | 92 |
| 5. | நாஞ்சிநாட்டு மருமக்கள்வழி மான்மியம் | 93 |
| 6. | குடிவெறி ... ... | 95 |
| 7. | உத்தரராம சரிதம் ... ... | 96 |
| 8. | ராமதாஸர் கடவுளைக்கண்டது ... | 98 |
| 9. | The Shastipurthi Exhibition Hall | 99 |
| 10. | கும்பகோணம் ... ... | 100 |


## சந்தா விவரம்.

| | |
|---|---|
| இந்தியா, இலங்கை, இரங்கூன் | ரூ. 2 |
| வெளிநாடுகளுக்கு | ரூ. 3 |

குறிப்பு:—சந்தாத்தொகை எப்பொழுதும் முன்னதாகவே செலுத்தப்படவேண்டும்.

T. Nagasubramania Rao Bros,

PUBLISHERS, TRIVANDRUM.

## THE "TAMILIAN"

### A Monthly Anglo—Tamil Journal.

FOR

the Educated and the Masses, Women and Children

Annual Subscription Rs. 2.

Strictly payable in advance.

SHORT STORIES: a speciality.

**The best Medium for advertisement.**

**Advertisement rates per month.**

| | | |
|---|---|---|
| Full page or 2 columns | Rs. | 5—0—0 |
| Half page or 1 column | ,, | 3—0—0 |
| Quarter page or ½ column | ,, | 2—0—0 |

Contract rates on application.

All literary communications, books for review etc, should be addressed to Mr C. N. Ananta Ramaiya Sastri M. A. Editor, The "Tamilian," Trivandrum; all orders, remittances, advertisements etc., to

Messrs. NAGASUBRAMANIA ROW BROS.,

Publishers, Trivandrum.

## மாதசரிதம்.

### ஸ்ரீமத் தாதாபாய் நௌரோஜி.

---

பாரத நாட்டின் தனிஜனத்தலைவராய் விளங்கின ஸ்ரீமத் தாதாபாய் நௌரோஜி தமது 92—வது வயதில் இம்மண்ணுலக வாழ்க்கையை நீத்த துக்க சமாசாரம் இமயம் முதல் குமரிவரை எங்கணும் பரவியிருக்கிறது. பாரத புத்திரர்களில் தலைமை ஸ்தானம் வகித்த இப்புண்ணிய மூர்த்தியின் மரணத்தை இந்தியனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் தத்தம் குடும்பத்தில் நேர்ந்த மரணமாகவே எண்ணி மனந்தளாகின்றான். பார்சி வகுப்பைச் சேர்ந்த இம்மகானை இந்துக்களும் கிரிஸ்தவர்களும், மகமதியர்களும், ஜெயினர்களும் புத்தர்களும் மற்றும் சமயிகளும் தத்தமதாகவே மதிக்கின்றார்கள். மெய்யன்பிற்கு ஜாதி மத பேதமும் உளதோ?

இம்மகான் பம்பாயில் ஒரு பார்சிப் புரோகித குடும்பத்தில் 1825 செப்றம்பர் மாதம் 4-உ பிறந்தார். 4—வது வயதில் இவரது தந்தையிறக்க, பிறகு இவரைப்பராமரிக்கும் பாரமெல்லாம் தாயின் தலைமேலாயிற்று. அவ்வுத்தமி அவரைக் காப்பதில் மிகவும் கண்ணுங்கருத்துமாயிருந்து, கல்வியும் பயிற்றுவித்தாள். தாதாபாயின் மாணவப் பருவம் மிகவும் சிறப்புடையதாயிருந்தது. வருஷந்தோறும் இனாம் பெற்றதுமன்றி போதகாசிரியர்களின் நன் மதிப்பையும் அடைந்து 1845-ல் பள்ளிப் படிப்பை நிறுத்தினார். அக்காலத்து பம்பாய் ஐக்கோர்ட்டில் தலைமை நீதிபதியாயிருந்தவர் இவரை இங்கிலந்துக்கனுப்பி பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கத் தூண்டுதல் செய்து, அதற்குள்ள செலவில் பாதியை தாமே கொடுப்பதாக ஒப்புக்கொண்டாராயினும், இங்கிலாந்து சென்றால் அவர் கிரிஸ்தவர் ஆய்விடுவாரென்ற பயத்தினால் அவரது பந்துக்கள் அவ்வேற்பாட்டிற்கு உடன்படவில்லை. எல்பின்ஸ்டன் வித்தியாலயத்தில் தலைமை உதவிப் போதகராகி, 1850-ல் கணிதசாஸ்திரமும் இயற்கைத் தத்துவ சாஸ்திரமும் கற்பிக்கும் போதகராய் உயர்த்தப்பட்டார். இந்தியர்களுக்குள் முதன் முதல் போதகர் (Professor) ஸ்தானம்பெற்றவர் இவரே. ஆனால் இப்பதவியை அவர் அதிக காலம்வகிக்கவில்லை. 1856-ல் இவ்வுத்தியோகத்தைவிட்டுவிட்டு, ஒரு பார்சிக்கம்பனியின் மானேஜராக இங்கிலாந்துக்குப் போனார். இதுவே இந்தியாவின் பாக்கியோதய காலமென்று சொல்லவேண்டும்.

1845 முதல் 55 வரை பம்பாயில் இருந்த காலத்தில் அவர் வெறும் போதகராக மட்டும் காலந்தள்ளவில்லை. தேச நன்மைக்காக உழைக்க வேண்டியது ஆங்கல வித்தியாப்பியாசம் பெற்றவர்களின் முக்கியமான கடமை யென்று நம்பின அவர் The Students' Library and Scientific Society என்னும் பெயரால் ஒரு சங்கம் ஸ்தாபித்தனர். அது இப்பொழுதும் நடைபெற்று வருகின்றது. அச்சங்கத்தின் அங்கமாக ஒரு ஆங்கலப் பத்திரிகையும் தொடங்கி அதற்கு முடங்காமல் விஷயதானமும் செய்தார். குஜராத்தி, மராத்தி பாஷைகளில் பல விஷயங்களைப் பற்றி வாதப் பிரதிவாதங்கள் நடத்தி பொதுஜன அறிவை விருத்திசெய்யும் பொருட்டு, பல இடங்களில் ஷை சங்கத்தின் கிளைகளாகப் பல உப சங்கங்களையும் ஸ்தாபித்தார். பெண் கல்விச்சாலைகள் பல ஏற்படுத்தி ஓய்வு நேரங்களில் எல்லாம் தாமே சென்று கற்பித்தும் வந்தார். அவைகளெல்லாம் மிக வளர்ச்சி யடைந்து நடைபெறுகின்றன. 1851-ல் ஒரு குஜராத்தி வாரப் பத்திரிகை வெளியிடத் தொடங்கினார். அவருடைய அப் பத்துவருஷ உழைப்பும் பம்பாய் நகரத்துக்கு மிகப் பயனுடையதாகவே இருந்தது.

இங்கிலாந்தில் சென்றவுடனே, இந்தியர்கள் சிவில் சர்விஸ் பரீட்சையில் சேர்வதற்குண்டாயிருந்த கஷ்டங்களை மிக வருந்தியுழைத்து நீக்கினார். இந்து தேச நிலைமையைப் பற்றி ஆங்கிலேயர்களுக்கு மெய்யறிவு கொடுக்கும்பொருட்டு London Indian Society என்னும் பெயரால் ஒரு சங்கம் ஸ்தாபித்தார். அச்சங்கம் இடையிடையே தளர்ச்சியடைந்து இப்பொழுதும் உயிரோடு வாழ்கின்றது. பின்னும் சிறிதுகாலம் சென்றபின்னர் East Indian Association என்னும் பெயரால் ஒரு பெரிய சங்கம் ஸ்தாபித்தார். இதில் இந்தியர்கள் மட்டுமன்றி இந்தியர்மீது அநுதாபமுடைய ஆங்கிலேயரும் அங்கத்தினராயிருந்தனர். இந்திய கவர்னர்களாயிருந்த அநேக பெருமக்களும் இதில் அங்கத்தினராகி இதன் வளர்ச்சிக்காக உழைத்தனர். இத்துடன் நில்லாமல் நௌரோஜி இங்கிலாந்தின் பலபாகங்களிலும் சஞ்சரித்து இந்தியாவின் நிலைமையைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்தும், பத்திரிகைகளுக்கு

எழுதியும், இந்திய விஷயங்களடங்கிய பத்திரிகைகளை வாசிக்கும்படி தூண்டியும்; ஆங்கிலத்தலைவர்களுக்கு இந்தியர் மீது அபிமானம் பெருகச் செய்தனர்.

இதற்கிடையில் 1862-வது வருஷத்தில் தான் மானேஜராயிருந்த பார்சிக்கம்பனியை விட்டுப்பிரிந்து, சொந்தமாக ஒரு வியாபாரக் கம்பனியும ஸ்தாபித்தார். ஒரு இந்தியனுக்கு உதவி செய்த ஏதுவால் அக்கம்பனிக்கு பெரியநஷ்டம் ஏற்பட்டு உடைந்துபோக, நௌரோஜி தன் உண்மையான நடக்கையால் அவ்விபத்திலிருந்து தப்பி 1869-ல் பம்பாய் நகருக்குத் திரும்பி வந்தார்.

அப்பொழுது அந்நகரத்தார் அவருக்கு மிகப் பெரிய உபசாரம்செய்து வரவேற்றார்கள் அன்றியும் ஒரு பெரிய தொகையும் நன்கொடையாக அளிக்கப்பட்டதெனினும் அதில் ஒரு காசையாவது அவர் தனக்காக உபயோகப் படுத்தாமல், தொகை முழுமையும் பொதுநல விஷயங்களுக்காகவே செலவுசெய்தார்.

உடன்தானே பார்லிமென்று கம்மிற்றியார் முன் வாக்குமூலம் கொடுப்பதற்காக இங்கிலாந்துக்குப் போகவேண்டியதாயிற்று. அந்த வாக்கு மூலத்தில் இந்தியர்களின் வறுமையைப் பற்றி மிகத்தெளிவாகவும் திறமையாகவும் பேசினர்.

1874-ல் பரோடா திவானாக இந்தியாவுக்கு வந்தார். அவ்வுத்தியோகத்திலும் நல்ல பெயரெடுத்து நாட்டுக்குப் பல நன்மைகள் செய்த பின்னர் திரும்பவும் பம்பாய்க்கு வந்து பொதுநலங் கருதி யுழைத்துச் சில வருஷங்கழிய, ஆங்கிலப் பார்லமென்டில் மெம்பராகும நோக்கத்தோடு இங்கிலாந்துக்குச் சென்றார். 5 ௵த்திய இடைவிடா உழைப்பின் பயனாக 1892-ல் பார்லிமென்று மெம்பரானர். பார்லிமென்று சபையில் அவர் செய்த முதல் பிரசங்கத்தினாலேயே அச்சபையாரின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டார். சிவில் ஸர்வீஸ் பரீட்சைக்கு இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏககாலத்தில் பரீட்சை நடத்த வேண்டியதற்கான ஏற்பாடு இவராலேயே நடப்பாயிற்று.

லாகூரில் நடைபெற்ற 9-வது காங்கிரசுக்குத் தலைவராக இந்தியாவுக்கு வந்தபொழுது, இந்தியர்கள் அவருக்குச்செய்த உபசாரங்கள் அரசர்களுக்குப்பெறுதற்கரியனவாயிருந்தன. இரண்டாவது முறையாக கல்கத்தா காங்கிரசிலும் தலைமை வகித்தார். பப்ளிக் சர்விஸ் கமிஷனிலும வெல்பி கமிஷனிலும் அவர் கொடுத்த வாக்கு மூலங்கள் இந்திய விஷயங்களை பற்றிய அவரது ஆராய்ச்சிக்கு இன்றும் அறிகுறியாய் விளங்குகின்றன.

சுருங்கச் சொன்னால் அவருடைய ஜீவிதகாலத்தின் ஒவ்வொரு நிமிஷமும் நாட்டின் நன்மைக்காகவே செலவு செய்யப்பட்டது. அவரது ஜீவித நோக்கமெல்லாம் இந்தியாவின் மேன்மையே. இந்தியாவின் மீது இணையற்ற மெய்யபிமான முடைய இம்மகானது மரணத்தால் இந்தியா அடைந்த பெருநஷ்டம் இன்றோ நாளையோ தீரக்கூடியதன்று. எனினும் அம்மகானது கொள்கைகளை இந்தியர்கள் முன்மாதிரியாக வைத்து ஒழுகுவார்களானல் அந்நஷ்டம் சிறுகச் சிறுக நிவர்த்தியாகும.

இவ்விடம் ஐக்கோர்ட்டு ஜட்ஜியாக இருக்கும் ஸ்ரீமான் A. M. முத்துநாயகம் பிள்ளையவர்கள் வருகிற ஆடிமாத முடிவோடு “ பென்ஷன் ” பெறப்போவதாக அறிகின்றோம், பென்ஷன் பெறும்காலம் சமீபிக்கும்போது பின்னும் உத்தியோக காலத்தை நீட்டுவதற்கான முயற்சியே இந்நாட்டில் சர்வ சாதாரணமாயிருக்க, துரைத்தனத்தார் தாமாகவே நீட்டிக்கொடுத்த ஒருவருஷமும் கூட உத்தியோகத்திலிருக்காமல் ஸ்ரீமான் பிள்ளையவாகள் இவ்வளவு திடீரென்று உத்தியோகம் விடப்போவது அநேகருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். இதிலும் அவர்களுடைய நீதியபிமானம் செவ்வையாக விளங்குகிறது. உத்தியோக விஷயத்தில் மட்டும நீதியாயிருந்தால் போதுமென்றும் சொந்த விஷயத்தில எப்படியிருந்தாலும் குற்றமில்லையென்றும் நினைக்கிற நீதிபதிகளும் இருத்தல் கூடும்.

55-வது வயதில் உத்தியோகஸ்தர்கள் பென்ஷன் பெறவேண்டுமென்பது துரைத்தன நீதி. அந்நீதியை லங்கனம் செய்வது உண்மையான நீதிபதிகளுக்கு ஒழுங்குமல்ல. இதுபற்றியே ஸ்ரீமான் முத்துநாயகம் பிள்ளையவர்கள் உத்தியோகம் விடுகிறார்கள்போலும்

துரைத்தன முதலில் அவர்களுக்கு அநாவசிய ஆசையில்லாமையை விளக்க இன்னும் பல உதாரணங்கள் உண்டு. அவர்களுடைய மூன்றாவது புத்திரி இம்முறை இன்றர் மீடியற்று பரீட்சையில் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்த விஷயம்யாவரும் அறிந்திருக்கக் கூடும். இதனால அவ்வம்மாளுக்கு துரைத்தன உபகாரப் பொருள் பெற உரிமையுண்டானலும் அதைப் பெற ஸ்ரீமான் பிள்ளையவர்களுக்குப் பிரியமில்லாததினால் தன் புத்திரியின் மேல்படிப்பைத் தற்காலம்

சிரத்திவைத்திருக்கிறார்கள் இதுபோலவே அவ்வம்மாள் ஸ்கூல் பைனல் பரீட்சையில் ஜெயமடைந்த பொழுது பெறுவதற்குஉரிமையுள்ள உதவிப்பொருளும் பெற முயலவில்லை. ஸ்ரீமாந் பிள்ளையவர்களின் பிதாவாகிய அரியநாயகம் பிள்ளையவர்களின் பரிசுத்தமான உத்தியோக அந்தரங்க ஜீவிதங்களும் இந்நாட்டாருக்கெல்லாம் அறிமுகமுள்ள விஷயமே.

“பிதுர் சத்குணம் புத்ர” என்னும் ஆப்த வாக்கியத்துக்கு ஸ்ரீமாந் முத்துநாயகம் பிள்ளையவர்களே உத்தம திருஷ்டாந்தமாக இருக்கிறார்கள். இவர்கள் சுகசரீரியாக சர்வ பாக்கியங்களும் பெற்று நீடூழி வாழும்படி இந்நாட்டாரெல்லாம் ஸர்வேசனை முழுமனதோடு வேண்டுகிறார்கள்.

We have much pleasure in publishing the following letter sent to us by Mr. P. Ramaswamy Iyer B. A., Joint Secretary of Sastiabdapurthi Central Committee.

Gentlemen,

With reference to your letter dated the 9th Instant about the presentation of an Address from the Public of Travancore to His Highness the Maha Rajah on the occasion of His Highness' Shashtiabdapurti, I have great pleasure in informing you that His Highness has kindly consented to receive the address. His Highness will be pleased to receive the Address in the Durbar Hall, Public Offices. The exact date and hour when His Highness will receive the Address will be communicated to you in due course.

I have further to communicate to you that it will not be convenient to His Highness to receive personally any other Address.

Yours sincerely,
(Sd.) M. Krishnan Nair.

To

The Secretaries,

Shastiabdapurthi Coimmttee,

## மாணாக்கர்களுக்கு
### ஒரு முக்கிய அறிக்கை.

---

தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி தற்காலத்துக் குன்றிவரும் குறைபாட்டை நீக்கும் பொருட்டும் நமது காருண்ய மஹாராஜா திருமேனியின் ஷஷ்டிபூர்த்தி ஞாபகார்த்தமாகவும் ஒரு தருமத் தமிழ்வித்யாசாலை திறக்க எண்ணியிருக்கிறேன். இதில்யாதொரு பிரதிபலனும் பெறாமல் விருப்பமுடைய மாணவர்களுக்கு வாரம் ஒரு முறை பிரதி ஞாயிற்றுக்கிழமையிலும் இலக்கணமும் இலக்கியமும் சொல்லி வைக்கப்படும். விருப்பமுடையவர்கள் ஆடி 20-க்குள் என்னிடம் நேரில் வந்து தத்தம் பெயரை ரெஜிஸ்தர் செய்து கொள்ளலாம். தற்காலம் 50 மாணாக்கர்களுக்கு மட்டுமே இடம் அளிக்கப்படும். ஆகையால் முந்துங்கள்.

இங்ஙனம்
S. முத்துசுவாமி பிள்ளை,
“தமிழன்” பத்திராதிபர்,
திருவனந்தபுரம்.

* * *

## ஒரு விஞ்ஞாபனம்.

ஐதராபாத் சிங்கர் ஸூயிங் மெஷீன் கம்பனியில் (Singer Sewing Machine & Co Hyderabad) வேலையாயிருந்த கிஸ்டன் என்னும் ஒரு தெலுங்கன் கீழ் வரும் நம்பருள்ள நோட்டுகளைத் திருடிக்கொண்டு போய்விட்டான். இதைப்பற்றி ஏதாவது தகவல் யாருக்காவது கிடைத்தால் கீழ்க்காணும் விலாசத்தாருக்குத் தெரியப் படுத்த அபேட்சை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| No. | 70831 | J. C/25 | Madras | 26-3-1913 | Rs. | 100. |
| ,, | 43089 | J. C/28 | Madras | 29-3-1913 | ,, | 100. |
| ,, | 98907 | J. C/21 | Madras | 20-3-1913 | ,, | 100. |
| ,, | 79117 | J. C/35 | Madras | 7-4-1913 | ,, | 100. |
| ,, | 47123 | J. C/29 | Madras | 31-3-1913 | ,, | 100 |
| ,, | 46345 | J. C/27 | Madras | 28-3-1913 | ,, | 100. |
| ,, | 42138 | W B/56 | India | 12-5-1916 | ,, | 10. |
| ,, | 37926 | W B/61 | India | 18-5-1916 | ,, | 10. |
| | | | | | | 620 |

Singer Sewing Machine Co,
Trivandrum.

# சந்திரகுப்தச் சக்கரவர்த்தி சரித்திரம். *

ஸ்ரீமாந்வ. வெ. ஸுப்ரஹ்மண்ய அய்யரவர்கள்.

## பொது முகவுரை.

நம் ஆரிய ஜாதியின் மகா வீரர்களின் சரித்திரங்களை ஒவ்வொன்றாக எழுதி வெளிப்படுத்த வேண்டுமென்கிற உத்தேசத்துடன் இந்த ஆரிய சரித்திர மாலையைத் துவக்குகிறேன். சரித்திரத்தின் திருஷ்டி பிரவேசிக்கவே முடியாத கற்பகோடி காலங்களுக்கு முன் முதற்கொண்டு நமது நாட்டில் தீரம், திருதி, கொடை, சாந்தம், பரோபகாரம், ஆத்மசமர்ப்பணம், பாரமார்த்திக வாழ்க்கை வாழவேண்டுமென்கிற ஆஸ்தை, முதலிய ஸர்வோத்தமான வீர குணங்கள் பிரகாசித்துக் கொண்டு வந்திருக்கையில் ஆரிய வீரர் சரித்திரங்கள் அனைத்தையும் ஒரு மனிதன் எழுதி முடித்து விடுதல் சாத்தியமன்று என நான் அறிவேன். உலகத்தின் கேந்திர ஸ்தானமான வடதுருவம் முதற்கொண்டு கன்னியாகுமரி வரையிலும், ஸஹாரா மணற்காடு என்ன, மத்திய தரைக்கடல் என்ன இவை முதற்கொண்டு பஸிபிக் கடல் வரையிலும் உள்ள பூப்பிரதேச மனைத்தையும் பாதசாரியாய்ச் சுற்றி, அங்கங்கேயுள்ள புராண பவனங்கள், ஆலயங்கள், அரண்மனைகள், மலைகள், நதிகள், ஏரிகள், நகரங்கள், நாடுகள், ஜனசமூகங்கள், இவைகளை அன்போடும் ஆதரவோடும் அறிவோடும் ஆராய்ந்து, நமது வேதபுராண, இதிகாச காவியாதிகளைத் தீரக் கற்று, ஆரிய தர்மத்தினிடம் விசுவாசமும் ஆரிய ஜாதியினிடத்து அன்பும் பாரத மாதாவினிடத்து அளவில்லாத பக்தியும்வாய்ந்து, இத்துடன் சரஸ்வதியின் கடாக்ஷத்தையும் பெற்று ஒருவன் இருப்பானேயானால் அவன் தான் ஆரிய வீரர்களின் சரித்திரத்தின் பெருமைக்கும் உயர்வுக்கும் ஏற்ற ஆசிரியனாவான். அப்பேர்ப்பட்ட வியாஸ பகவானை நாம் தற்காலம் காணுதல் அசாத்தியம். ஆனால் வீர சரித்திரம் தான் மனிதனுடைய அறிவுக்கு ஔஷதம். தன்வந்திரி கையால் கொடுக்கும ஔஷதந்தான் சரியானபயனைக்கொடுக்குமானாலும் தன்வந்திரி அகப்படாதபோது எப்படி நோயாளி ஒரு சாதாரண பண்டிதனிடமாவது ஔஷதத்தைச் செய்வித்துச் சாப்பிடல் தகுதியாகுமோ அப்படியே தமிழ் நாட்டாரும் வியாஸர் வரும்வரைக் காக்காமல் சாதாரணமான ஆசிரியர் எழுதும் சரித்திரங்களைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொள்ளுவது நியாயமேயாகும். தமிழ் ஜாதியாரின் பேரில் அளவில்லாத அன்பும், பாரத நாட்டின் மீது சொல்லொணாத காதலும், நம்முடைய வீர புருஷர்களிடத்து அத்தியந்தமான, அத்துவிதீயமான பக்தியும் இந்தவகை நூல்கள் எழுதப்போதுமான யோக்கியதை தரும் பக்ஷத்தில் நான் இதை எழுத முன் வந்தது வெறும் துணிவு ஆகாது. ஆனால் இன்னும் சிறந்த ஆசிரியர் வந்து இந்தச் சரித்திரங்களை விஸ்தாரமாக எழுதி, தமிழ் நாட்டாருக்கு உண்மையான ஆநந்தமும் அறிவும் கொடுக்கத்துவக்கி, இந்தச் சிறு புத்தகங்களை அனாவசியமாக்கி விடவேண்டுமென்பது தான் என் கோரிக்கை.

## நூல்

மனித ஜாதி எந்த நாட்டில் நாகரீகம் என்கிற பூண்டை முதல் முதல் பயிர் செய்யத் துவக்கிற்று என்றால் அந்த நாடு பாரத நாடே ஆகும். மனிதனுடைய அறிவு எங்கே முதல் முதல் நன்றாக விகசித்தது, மனிதனுடைய ஆத்மசக்திகளெல்லாம் எங்கே முதல் முதல் பரிபூரணமாய் விரிய ஆரம்பித்தன, ஜட உலகத்துக்கும் தனக்குமுள்ள பேதத்தையும் அநிர்வசனீயமான ஒருமையையும் மனித அறிவு எங்கே முதல் முதல் உள்ளங்கை நெல்லிக்கனி போலக் கண்டது, என்று கேட்டாலும் அந்த இடம் நமது பாரத பூமியேயாகும். அஹிம்ஸா பரமோதர்ம: என்கிற சாசுவதமான சத்தியத்தை உணர்ந்து; அதைத் தன்னுடைய நோக்கங்களில் முதன்மையானதாகக் கொண்டு நடவடிக்கையில் அதை அநுஷ்டித்து வரச் சர்வவிதமாயும் முயன்று வரும் நாடும் நமது பாரத நாடே. புருஷ லக்ஷணங்களில் ஆற்றலைப் பிரதானமானதாக நினைத்ததும், போரிற் புறங்காட்டி ஓடுதலைக் கயமைக்கும் கயமையாக நினைத்து என்றும் வீரலக்ஷ்மீப் பிரசன்னமாக விளங்கியதும் நமதுகண்ணுக்குக் கண்ணான பாரத பூமியேதானாகும்.

* Copy-right with the Author.

குறிப்பு—ச. மு. என்ற சுருக்கத்துக்கு சாலிவாகன சகாப்தத்துக்கு முன் என்று பொருள் கொள்க.

இன்னும், மனித ஜாதியைப் பரிபூரண நிலைக்குக் கொண்டு வரும் ரகசியங்களைக் கண்டு பிடித்து அவைகளைக் கற்பாந்த காலம் வரையில் பிரயோஜனமாத மாறு வேதங்களாக விருத்து, இன்றுவரையிலும் அவைகளைக் காப்பாற்றி வரும் நாடு எது? மனித அறிவு இதற்கு அப்பால் போகமுடியாது என்று கூறும்படியான விசாரணைகள் செய்து, அஹம் ப்ரம்ஹாஸ்மி, தத்வமஸி, முதலிய மகா தத்வங்களை உபநிஷத்துக்கள் வாயிலாக வெளியிட்ட நாடு எது? 'சர்வோத்கிருஷ்டமான காவியங்களையும் கானமார்க்கங்களையும் சிற்பங்களையும்சித்திரங்களையும் உலகத்துக்குக் கொடுத்த நாடு எது? இதெல்லாம் பாரத நாடே· தவிர, உலகத்திலுள்ள கிரிகளுக்கெல்லாம் உந்நதமான ஹிமயகிரி எந்த நாட்டுக்குக் கடத்தற்கரிய அரண்போல விளங்குகிறது? எந்த நாட்டு நதிகளை நினைத்தால் அவை கீர்த்தி பெற்றிராத நாளே இல்லை என்று தோன்றும்? எந்த நாடு பூகோளத்தின் பெரும்பாட்டையாகிற சமுத்திரத்தினின்று பூகோளத்தின் உச்சியாகிற ஹிமயகிரி வரையிலும் சென்று மனித ஜாதியின் ஆதி வாசஸ்தானமாகிய ஆசியாகண்டத்திற்கு நடு நாயகமாக விளங்குகிறது? வற்றாத நீர்நிலைகளும், சளைத்துப்போகாத மருத நிலங்களும் விஸ்தாரமான காடுகளும், என்றும் வாடாத சோலைகளும், எந்த நாட்டில் அமோகமாகப் பொலிகின்றன? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் உத்தரமும் 'பாரத நாடேதான் என்று சொல்லவேண்டும்.

இப்பேர்ப்பட்ட பாரதகண்டமானது மனு முதலான மகான்களால் நீதி தவறாமல் நெடுங்காலமாக ஆளப்பட்டு வந்தது. ஆதியில் சூரியவம்ச அரசர்கள் அயோத்தியாபுரியை ராஜதானியாகக் கொண்டு ஹிந்துஸ்தானத்தில் ஏகாதிபத்தியம் நடத்தி வந்தார்கள். ஸ்ரீராமபிரான் காலத்துக்குப் பிறகு நாளடைவில் அந்த வமிசத்தில் தேசு குறைந்து வரவே ஏகாதிபத்தியம் அதன் கையினின்று நழுவிச் சந்திரவமிச அரசர்களின் கையில் சேர்ந்தது. தற்காலம் Delhi டில்லியாக விளங்குகிற ஹஸ்தினாபுரந்தான் சந்திரவமிசத்தவரின் தலைநகராக இருந்தது. பாரத யுத்தம் நடந்தபிறகும் நெடுங்காலம் வரையில் சந்திர வமிசத்தின் வீறு குன்றாமலே இருந்து வந்தது. ஆனால் காலசக்கரத்தின் சுழற்சியால் இந்த வமிசமும் சீர் குலைந்து ஏகாதிபத்தியத்துக்கு அருகமாகி விட்டது. ஆகையால் மகத ராஜ்யத்தை ஆண்ட சிசுநாக வமிசம் தலை எடுத்து ராஜ கிருகத்தினின்று ஹிந்துஸ்தானத்தில் சக்ராதிபத்தியம் செலுத்தி வந்தது. பிம்பிஸாரனும் அஜாதசத்ருவும் இந்த வமிசத்தில் தோன்றிய அரசர்கள். பிம்பிஸாரன் காலத்தில் தான் மனித ஜாதியின் நாயகங்களான வர்த்தமான மகாவீர பகவானும் புத்தபகவானும் நமது நாட்டில் தர்மோபதேசம் செய்துவந்தார்கள். மகாவீரனுடைய சிஷ்ய பரம்பரைக்குத் தான் இன்று ஜயினர் அல்லது சமணர் என்ற பெயர் வழங்குகிறது. புத்த பகவான் தர்ம லோகத்தில் போட்ட விதையானது பிரும்மாண்டமான விருக்ஷமாகி உலகத்தில் 50 கோடி ஜனங்களுக்கு இன்றும் நிழல் கொடுத்து வருகிறது. நமது நாட்டில் இப்பொழுது பௌத்தமதம் வழக்கில் இல்லை. ஜயின மதத்தை அனுசரிப்போரும் சுமார் 5 லக்ஷம் ஜனங்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் அவுரி விளைந்த நிலத்தில் அவுரி ஓய்ந்து அழிந்த பிறகு பயிர் முன்னிலும் பதின்மடங்கு செழுமையாக விளைவது போல, ஜயினமதமும் பௌத்தமதமும் நம் நாட்டில் ஜனத்தொகை விஷயத்தில் மலினமடைந்து விட்டாலும் அவைகளின் சத்தானது நம் இதயத்தை அகற்றி, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பாகத்திலும் பாவி, நம்முடைய தர்ம லக்ஷியத்திலேயே புகுந்து விட்டது.

இந்த சிசுநாக வமிசத்தில் சாலிவாகன சகாப்தத்துக்கு 528 வருஷங்களுக்கு முன் பட்டத்துக்கு வந்த உதயன் என்னும் அரசன் தான் பாடலீபுத்திரம் என்றும் பாடலீபுரம் என்றும் வழங்கும் நகரத்தைக் கட்டினான் என்பது கர்ண பரம்பரை. அவனுக்குப் பிறகு நந்திவர்த்தனன் என்றும் மகாநந்தி என்றும் இரண்டு அரசர்கள் ஆண்டார்கள். மகா நந்தி இறந்ததும் அவனுக்கு ஓர் சூத்திர மங்கையினிடத்துப் பிறந்த மகன் சிம்மாசனத்தை ஆக்கிரமித்துக் கொண்டு மகா பத்ம நந்தன் என்ற பெயருடன் அரசாக்ஷி புரியலானான். மகா நந்தியோடு சிசுநாக வமிசம் முடிந்து விட்டது என்று சொல்லலாம்.

மகா பத்ம நந்தன் வமிசத்தில் பத்து அரசர் நூறு வருஷம் ஆண்டு வந்தார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. ஜயின புராணங்கள் இவர்களுடைய ஆட்சிகாலம் 155 வருஷங்கள் எனக்கூறும். எத்தனை வருஷங்களாக இருந்தாலும் கடைசி நந்தனாகிய தன நந்தன் கொடுங்கோலனாக இருந்தான் என்று நம்முடைய புராணங்களும் ஒப்புகின்றன, நமது தேசத்தில்

அலெக்ஸாந்தர் படையெடுத்து வந்ததை வருணிக்கும் கிரேக்க இதிகாசகர்களும் சொல்லுகிறார்கள்.

குவிந்தக் குர்வியன் என்னும் சரித்திராசிரியன் தன் அலெக்ஸாந்தர் சரித்திரத்தில் பின் வரும் கதை அக்காலத்தில் வழங்கிற்று என்று எழுதுகிறான். அதாவது, தனநந்தன் தாயாரான ராணியும், அவளுடைய சோரநாயகனை ஒரு நாவிதனும் சேர்ந்து சூழ்ச்சி செய்து ஒன்பதாவது நந்தனைக் கொலைசெய்து விட்டுச் சிங்காதனத்தில் அமர்ந்தார்கள். தனநந்தன் அந்தப் பரியாரிக்குப் பிறந்த மகனே. நந்தவம்சத்து இளவரசர்களில் யாரேனும் உயிரோடிருந்தால் தன்னுடைய ஆட்சி நிலைக்காது என்று கண்டு பரியாரி அவர்கள் எல்லோரையும் ஒவ்வொருவராகக் கொன்று விட்டான். தனன் வயது வந்து பட்டத்துக்கு வந்ததும், தன்னுடைய பிறப்பு ஈனமானதால் தன் பேரில் ஒருவரும் உண்மையான விசுவாசம் செலுத்த மாட்டார்கள் என நினைத்துத் தன் பிரஜைகளை வருத்துவானாயினான். தவிர அவன் அரசனுக்கேற்ற கௌரவத்தில் நில்லாமல் அற்ப சகவாசத்திலும் அற்ப சுகங்களிலும் தன் காலத்தைச் செலவுசெய்து கொண்டு ராஜ்ய பரிபாலனத்தைக் குணவீனர் கையில் விட்டு விட்டிருந்தான். அவர்கள் செய்த அக்கிரமங்களில் முக்கியமானது தோல் காசு போட்டு ஜனங்களையும் வியாபாரிகளையும் பணத்தைக் கொடுக்கச் சொல்லி அதற்குப் பதிலாக அந்தத் தோலாலாகிய காசுகளைக் கொடுத்து வந்ததே.

ராஜ்யத்தில் எங்கு பார்த்தாலும் அதிருப்தியாக இருந்தது. சிங்காதனத்தின் மீது ஓர் நாவிதன் மகன் உட்கார்ந்துகொண்டு ராஜ்யாதிகாரம் செலுத்துவதைக் கண்டு பிரஜைகளுக்கெல்லாம் வெட்கமும் அவமானமுமாக இருந்தது. ஆனால் அவனை எப்படி அசைப்பது? செல்வமெல்லாம் அவன் கையில் இருந்தது. அவன் படையோ 8000 ரதங்களும் 6000 யானைகளும் 80000 குதிரைகளும் 200000 காலாட் படைகளும் கொண்ட பிரும்மாண்டமான சைனியமாகும்.* ஆகவே ஜனங்களும் ஜனத்தலைவர்களும் என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பிக் கொண்டு அநேகமாய் நிராசையில் மூழ்கிவிட்டிருந்தார்கள்.

இந்தச்சமயத்தில் ஓர் வாலிபன் தன் பெயரைச் சொல்லிக் கொள்ளக் கூட பயந்து கொண்டு, மாறு பெயர் பூண்டு, ஒரு நாள் தங்கிய இடத்தில் மறுநாள் தங்காமல், பரதகண்டம் முழுவதும் சுற்றிக் கொண்டு மறைந்து திரிந்து கொண்டிருந்தான். போகுமிடமெல்லாம் அரசனுடைய கொடுங்கோன்மையால் ஜனங்கள் படும் கஷ்டங்களைக் கண்டு கண்ணால் ஜலம் விடுவான். இத்தனை நல்ல ஜனங்கள் இந்தத் துன்பத்தில் ஆழ்ந்திருக்கின்றார்களே! இதற்கு ஒரு முடிவுமில்லையா ஈச்வரா? என்று ஏங்குவான். இந்தத் துன்பங்களுக்கெல்லாம் காரணனான ஜார புத்திரனான தனநந்தனையும் அவனுடைய அதிகாரிகளையும் அடிக்கடி தனக்குள் காய்வான். அரசன்மீது ஆத்மசம்பந்தமான காரமும் அவனுக்கு இல்லாமலில்லை. ஏனெனில் நாவிதனால் கொல்லப்பட்ட இளங்கோக்களில இந்த வாலிபனுடைய தந்தையும் ஒருவன். இவனும் அந்தக் கொலையினின்று தப்பியது தெய்வச் செயல்தான். ஆகையால் அவனுக்கு அரசன்பேரில் க்ஷாத்திரம் இருந்தது என்பதில் ஆச்சரியமில்லை.

அந்த வாலிபன் ராஜவம்சத்தைச் சேர்ந்தவன் என்று சொன்னோம். அவனுடைய பிதா நந்தவம்சத்து இளங்கோவாவான். ஆனால் அவனுடைய தாயாரான முரா என்பவள் அரசவம்சத்தைச் சேர்ந்தவளல்லள். அவள் ஒரு சாதாரண குலஸ்திரீ. ஆகையால் சாதாரணமான காலங்களில் சிங்காதனத்தைத் தான் அடையலாகும் என்ற நினைவு கூட அவனுக்கு வந்திராது. ஆனால் நந்தர்களின் சிங்காதனத்தில் ஒரு ஜார புத்திரன் வீற்றிருக்கையில், நந்தவம்சத்து ராஜபுத்திரர் ஒருவரும் உயிருடனில்லாதபோது, ஜாரபுத்திரனுடைய பாத்தியத்தை விடத் தன்னுடைய பாத்தியம் எத்தனையோ மடங்கு உயர்ந்தது என்று அவன் நினைப்பது சகஜம்.

ஆகவே இந்த வாலிபன், ஜனங்களின் கஷ்டங்களைக் கண்டு சகியாத துக்கமும், தன் பிதாவையும் தன் குடும்பத்தையும் அழித்துவிட்டுத் தன்னையும் பரதேசியாக்கிவிட்ட அரசன்மீது உண்டான க்ஷாத்திரமும் மனதை அறுத்துக்கொண்டிருக்க ஊர்ஊராகப் போய்க்கொண்டிருந்தான். அவன் பெயர்தான் சந்திரகுப்தன். அவன்தான் நமது சரித்திரத்தின் நாயகன். அச்சமயத்தில் பேர் அலெக்ஸாந்தர் என்னும் பிரதாபம் பெற்ற மகேதோனிய அரசன் பாரஸீக ஏகாதி

* அடிக்குறிப்பு—இது புளூதார்க்கின் கணக்கு. குவிந்தக் குர்வியன் என்பவன் ரதங்களின் தொகை 2000 என்றும், யானைகளின் தொகை 3000 என்றும், குதிரைகளின் தொகை 20000 என்றும் சொல்லுகிறான்.

பத்திபத்தை வீழ்த்திவிட்டு, காந்தார தேசத்திலும் அதைச்சுற்றியுமுள்ள ஆரிய ஜாதிகளை அடக்கிக்கொண்டு, ஸிந்து நதியைக் கடந்து ஆரியாவர்த்தத்தில் பிரவேசித்து, ஜீலம் நதிக்கரையில் புரூரவா என்னும் அரசனை வென்றுவிட்டுக் கிழக்கே சென்று விபாஸா என்னும் நதிக்கரையில் தன் சேனையை நிறுத்தியிருந்தான். அப்பொழுது யுத்த தந்திரத்தில் தனக்கிணையில்லையென்று மூன்று கண்டங்களில் தன் இசையை நிறுவியிருந்த மகாவீரனைப் பார்க்க வேண்டுமென்னும் அவாவோடு சந்திரகுப்தன் அவன் பாசறைக்கு வந்தான். அவனோடு அவன் எத்தனை காலம் இருந்தான் என்பதற்காவது என்ன செய்தான் என்பதற்காவது ஒருவித சான்றுமில்லை. ஆனால் அலெக்ஸாந்தரின் தரிசனம் அவன் மனதிலுள்ள உற்சாகத்தையும் அவாவையும் கிளறிவிட்டிருக்கும் என்பதில் தடையில்லை. சாதாரணமான மனிதருக்கே ஒரு வீரபுருஷனைக் காணும் போது, நாமும் அவன்மாதிரி இருக்க முயல வேண்டும் என்ற எண்ணம் சற்று நேரத்திற்குத் தோன்றுகிறது.* அப்படியிருக்க இயற்கையிலேயே ஊக்கமும் வீர்யமும் திண்மையும் நிரம்பிய மனிதருக்கு வீரர்களின் சந்தரிசனமானது அவர்களுக்கு அதுவரையில் இல்லாத வேகத்தைக் கொடுக்கிறது என்பதில் கொஞ்சமேனும் ஆச்சரியமில்லை. அலெக்ஸாந்தரைப் பார்த்தபிறகு சந்திர குப்தனுக்குத் தானும் மனது வைத்தால் உலகத்தில் ஒரு பெருங்காரியம் செய்துவிடலாம் என்று தோன்றிற்று. "அலெக்ஸாந்தரும் மனிதன் தானே, தேவன் இல்லையே: நானும் மனிதனே: அவன் செய்த மேலை நான் மாத்திரம் செய்யமுடியாதா? ஊக்கமும் பிடிவாதமும் சலியாமையும் மாத்திரம் இருந்துவிட்டால் நானும் என்னுடைய கருத்தைக் கட்டாயம் நிறைவேற்றுவேன்," என்று சிந்தித்துக் கொண்டு சந்திரகுப்தன் தன்னுடைய மனதில் இவ்வரிய தேவ குணங்களை வளர்த்துக்கொண்டு, காலத்தைப் பிரதீக்ஷித்துக் கொண்டிருப்பானாயினன்.

* அடிக்குறிப்பு;—இது உண்மையிலும் உண்மை. நம்முடைய காலத்தில் கூட ஸ்வாமி விவேகாநந்தரைப் பார்த்தவர்கள் மற்றவர்களை விட தர்மசீலர்களாகவும் உற்சாகவான்களாகவும் இருப்பதை நாம் கண்டிருக்கிறோம்.

## இறந்தவர் வாய் திறந்தார்.

ஸ்ரீமாந் T. V. அருணாசலம் பிள்ளையவர்கள்

---

இதற்குமுன் எல்லாம் நியாய ஸ்தலங்களில் வெளி இலக்ஷணங்களையும் வெளிச்சான்றுகளையும் கொண்டு மட்டிலும் கொலை செய்த ஒருவனை நிரபராதியென்றும், ஒன்றுமே செய்தறியா ஏழையை கொலைபாதகன் என்றும் தீர்ப்புச் செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுதோ கொலையாளி, சத்தி நூல் வல்லாரையும் (physicists), ரசாயன சாஸ்திரிகளையும் (Chemists.) ரன்ஜன் ரச்மிகளைக் * கையாடுபவர்களையும் (Rontgenologists) பயந்திருக்க வேண்டியிருக்கிறது. இவர்கள் கொலைச் செயலின் ரூடத்தை மிக நுட்பமாயறிந்து கொலையாளிக்குத் தகுந்த தண்டனை விதிக்கும்படி செய்கிறார்கள். இவர்கள் தாமே வெளிச் சான்றால் குற்றஞ்சாட்டப்பட்டு நிற்கும் நிரபராதியையும் சிக்ஷையிலிருந்து இரக்ஷித்து விடுகிறார்கள்.

நியாயஸ்தல ஒழுங்கு எத்தன்மையது என்று கவனிப்போம். ஒரு மனிதன் ஒரு பிணத்தருகில் நின்று அதைப் பார்த்துவிட்டுப் போகிறான் என்று நினைத்துக் கொள்வோம். அவனுடைய கையிலும் கத்தியிலும் இரத்தக்குறிகள் காணப்படுகின்றன. அவனே கொலை புரிந்தவன் என்று தீர்ப்புப் பிறப்பிக்க இவ்வளவு ருசுவும் போதுமானது. அவன் வக்காலத்துக் கொடுத்து, தான் குற்றவாளியல்லவென்று ருசுப்படுத்த வீணில் முயலவேண்டாம்.

* Prof. Rontgen என்ற ஒரு ஜெர்மானியப் பண்டிதரால் 1895-ல் புதிதாய் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் வகைக் கிரணங்கள். இவற்றின் உதவியால் நம்தேகத்தினுள் இருக்கும் என்புக்கூடு, பெட்டியிள அடைத்து வைத்திருக்கும் வஸ்துக்கள், மிருகங்களின் தொண்டையிலோ அல்லது வேறெந்தப் பாகத்திலோ தங்கிக் கொண்ட இதர வஸ்துக்கள், இன்னும் இவை போன்ற அனேக மறை பொருள்கள் ஆகிய இவற்றின் போட்டக்ராப்(Photographs) எடுக்கலாம். இந்த ரச்மியை மேனாட்டார் அநேகநோய்களைக் குணப்படுத்துமாறு உபயோகித்துவருகின்றனர்.

இது போன்ற ஒரு கேஸ் பிரான்ஸில் நடந்ததாம். ஒரு மனிதன் ஒரு முயலைத் திருடி, அந்த முயலைச் சொந்தக்காரன் கண்டால் அறியாமலிருக்கும் வண்ணம் அதைப் பொரித்து விட்டான். கறி சமைக்க முயலை அறுத்துக் கொண்டிருந்த பொழுது இரண்டொரு துளி இரத்தம் இவன் கைமேல் விழுந்தது. இவன் மேல் எல்லோருக்கும் சாதாரணமாக ஒரு வெறுப்பு. மேலும் தேகத்தில் இரத்தக்குறிகள் கிடந்தன வன்றோ? ஆகவே இவன் ஏதோ ஒரு கொலை செய்திருக்கிறான் என்று யாவரும் சொல்லத் தொடங்கினார்கள். அங்ஙனமிருக்க ஒரு பண்டிதர் வந்து அம்மனிதன் கைமேற்பட்டிருந்தது முயலின் இரத்தம்தான் என்று ருசுப் படுத்தினர்,

E. T. ரிச்சட் (Richard), A. P. ப்ரௌன் (Brown) என்ற இரண்டு ப்ரொபஸர்கள் ஊர்வன பறப்பன, நடப்பன ஆகிய உயிர்ப் பிராணிகளில் ஒவ்வோரினத்தின் இரத்தமும் தனித்தனி ஸ்படிகாகாரணம் (Crystallization) உடையது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்விஷயத்தில் கைதேர்ந்தவர்கள் ஒவ்வொரு ஜனசமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பிரத்தியேகம இரத்த லக்ஷணம் உண்டு என்கின்றனர் இவர்கள் கூற்று உண்மையாயிருக்கும் என்று நம்பப்போதிய சான்றும் உள. பழையகாலந் தொடங்கியேவன்மமுள்ளவர்கள் நிரபராதிகள் மேல் கோழியிரத்தத்தையோ, ஆட்டிரத்தத்தையோ சிந்தும்படி செய்து அவர்களைக் குற்றப்படுத்த முயன்றிருக்கிறார்கள். இனிமேல் அத்தகைய செய்கைகள் நாகரீகமுள்ள நாடுகளில் நடைபெறமாட்டா.

சிலகாலத்துக்குமுன் ஒரு மேனாட்டுப் பெண்பிள்ளை தன் மகளைக் கொன்றாள். போலீஸாருக்குக் குற்றவாளியைக் கண்டு பிடிக்க முடியாமற்போயிற்று. நியாயவாதி "அறிதற் கருமையாயிருக்கின்ற ஒருவராலோ அல்லது பலராலோ பெண் கொலையுண்டிருக்கவேண்டும்" என்று தீர்ப்புச் சொன்னார். ஆனால் அந்தப் பெண்பிள்ளைமேல் வெறுப்புடைய அயல் வீட்டாருள் ஒருவர் தாமே துப்பறிய எண்ணங் கொண்டு, வேண்டிய முயற்சிகள் செய்து வருவாராயினர். சுமார் ஒரு வருஷம் கழிந்தபின் அவள் வீட்டு வெளிச்சுவரின் மேல் இரத்தம் தோய்ந்த கசாப்புக் கத்தி யொன்று கண்டெடுக்க நேர்ந்தது. அவளைக் கேட்டபொழுது "அது நான் போன்வாரம் கோழியறுக்க உபயோகித்த கத்தி. அதை சுத்தி செய்ய வேண்டுமென்று வெளியில் வைத்திருந்தேன். இவ்வளவுதான் நான் அறிவேன்" என்றாள். கத்தியை பரீக்ஷை செய்யும்படி மிருந்த பழக்கமுடைய ஒருவருக்கு அனுப்பிக் கொடுத்தார்கள். "அது ஒருவருஷத்துக்குமுன் மனித இரத்தத்தில் தோய்ந்த கத்தி" யென்று அவர் அபிப்பிராயப் பட்டார். பெண்பிள்ளையும் மிகப் பயந்தவளாகி குற்றத்தை ஒப்புக்கொண்டாள்.

A. லெச்சான்ஸரோ (Lechanzaro) என்ற இத்தாலியப்பண்டிதர் ஒருவர், இரத்தக்கறைகளின காலங்களை நிதானித்தறியும் வழியை பரிபூரணமாக்கி இன்று வருஷங்கள் ஒன்பதிற்குமேல் ஆகின்றன. பூதப்பாண்டிக் கருகாமையிலிருக்கும் தாடகை மலையில் ஒரு பெரும்பாறையில் காணப்படும் சிவப்பும் கறுப்புமான கோடுகள், ஸ்ரீராமர் தாடகை வதம புரிந்த பொழுது அவளுடைய தேகத்திலிருந்து சிந்திய இரத்தத்தின் கறைகள் என்று பலரும் இன்றைக்கும் இப்பொழுதும் எண்ணி வருகிறார்கள். மேற்சொன்னவாறு திறமுள்ள ரசாயன சாஸ்திரிகளும், சத்தி நூல் வல்லோரும் வந்தால் இதனுண்மை தெள்ளிதில் விளங்கும்.

சிலவேளைகளில் கொலைசெய்பவர் கொலையுண்ட தேகத்தை வெட்டி ஒருவரும் அறியாமலிருக்குமாறு துண்டு துண்டாக்கி விடுகிறார்கள். இப்படிச் செய்வது பெரும்பான்மையும் குற்றவாளிக்கு விரோதமாக முடிந்து குற்றவாளியைக் காண்பித்துக் கொடுத்து விடுகின்றது. ஒரு கசாப்புக் காரன் கொலை செய்தானால் அவன் கத்திக்கு இசையான தேகம் கிரமப் கணக்காக வெட்டப் பட்டிருக்கும். அதுபோலவே மேனாட்டு ரணசிகித்தை (Surgery) கற்ற ஒருவன் கொலைசெய்யத் துணிவனேல், கைதேர்ந்த விதமாகவே கொலை செய்வான்.

'கொலையுண்ட தேகத்தில் வியாதியினாலோ பழக்கத்தினாலோ ஏதேனும் ஒரு குறையல்லது கேடு ஏற்படுமானால் அது துப்பறிபவனுக்கு ஒரு சிறந்த வழி காட்டியாய் அமையும். ஆனால் ஒரு மூர்க்கன் தன் தகப்பனைக் கொன்று அவன் தேகத்திலிருந்த அடையாளங்கள் ஒன்றும் தெரியாதபடிக்கு நூறு துண்டுகளாகவெட்டித் தன்வீட்டுத்தோட்டத்தில் அங்கங்கே

புதைத்துவிட்டு “ அப்பா கொல்லத்துக்குப் போனவர் இன்றும் வரவில்லையே! வயது காலம்; என்ன ஆயிற்றோ தெரியவில்லை ” என்று நாடோறும் சொல்லிக்கொண்டிருப்பானெனில் அவன்மேல் எவரும் சந்தேகம் கொள்ள ஏதுவில்லை.

கொலைகளவு அடிக்கடி நடக்கின்றதான பிரான்ஸ் தேசத்தில், ஒரு கிருஷித் தோட்டத்தில் மேற் கூறியபடி ஒருகசாப்புக் கொலை நடந்தது. சம்பவம்நிகழ்ந்து ஆறு மாதங்கள் கழிந்த பின்னர் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு கூலியாள் ஒரு கையைக் கண்டெடுத்தான். அது யாருடைய தேகத்தைச் சேர்ந்தது என்றறிய ரேகைகள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் மருத்துவத்திலும் நீதி சாஸ்திரத்திலும் வல்லவரான ஒருவர் கையிலிருந்த ஒரு விசேஷமான காய்ப்பைமட்டும் செவ்வையாகப் பார்த்தறிந்து கொண்டார். பின்னர் அவர் ஒருவன் மேல் சந்தேகங்கொண்டு, அவனை யணுகி “ அப்பா, உன் தகப்பனார் உபயோகித்துக் கொண்டிருந்த கம்பை எனக்கு இன மாய்த் தரமாட்டாயா?” என்று கேட்டு வாங்கிக் கொண்டரர். விசேஷ கொத்து வேலை செய்யப்பட்டிருந்த கம்பின் பிடியும் காய்ப்பும் எல்லா வகையிலும் பொருத்த முடையனவாயிருந்தன. குற்றவாளியும் தண்டிக்கப் பட்டான். இதுபோலவே ஒரு பெண்ணினுடைய வெட்டுப் பட்ட தேகத்தில் கால் முட்டுகள் நன்றாய்க் காய்த்திருந்ததினால் அவள் ஒரு கன்னிகைச் சன்னியாசி (nun) யாயிருக்க வேண்டும் என்று அனுமானிக்கப் பட்டது.

கொலையுண்ட ஒருவனது தேகத்தில் அவன் பின்பற்றி வந்த தொழிலினாலோ அல்லது பழக்கத்தினாலோ ஏதேனும் மாறுபாடுகள் உண்டாயிருக்குமானால் அவை, வேறு ரேகைகள் இல்லாமற் போனாலும், அவனைக் கண்டு பிடித்தற்கு உபகாரமாயிருக்கின்றன. நெல் குத்தி ஜீவிப்பவளுடைய பெருவிரல் நுனியும் கையின் உட்புறமும் காய்த்திருக்கும். தைபற்காரனுடைய முன்னம் பற்கள், நூலைக்கடித்தறுக்கிற பழக்கத்தினால் தேய்ந்து போயிருக்கும். கந்தகத்தீப்பட்டி உண்டாக்குகிற இடங்களில் வேலை செய்பவரது எயிறு கெட்டுப் போயிருக்கும். பனையேறியின் நெஞ்சு கைகால்கள் நன்றாய்க் காய்ப்புற்றிருக்கும். இது போலவே ஒவ்வொரு தொழிலாளிக்கும் வெவ்வேறு அடையாளங்கள் உள்ளன

ஒருவன் தரையில் மடிந்து கிடக்கின்றான். நெற்றியில் துபாக்கிக்குண்டு பாய்ந்திருக்கின்றது. கையில் ரிவாள்வர் ஒன்று பிடித்துள்ளான். நாம் என்ன அனுமானிப்போம். அவன் தற்கொலை செய்து கொண்டான் என்றே. ஆனால் வாஸ்தவமான தற்கொலையில், கொலையுண்டவன் ஆயுதத்தை மிக இறுக்கமாய்ப் பிடித்திருப்பான். ஆகையால் அதை அவன் கையிலிருந்து பறித்தெடுக்க கொஞ்சம் பலம் உபயோகிக்க வேண்டும்.

கையானது மரணம் சம்பவிக்கிற வரையில் வஸ்துவைப் பலத்துடன் பிடித்து வைத்திருக்கிறது என்றும் திடீரென்று மரணம் வந்ததும் கைச்சதைகள் கொளுத்துப்பட்டு நின்று விடுகின்றன வென்றும் நம்பப் படுகிறது. அநேகர் பிரேதத்தைக் கொண்டு சாமான்களைப் பிடித்து வைத்திருக்கும்படி செய்ய முயன்றிருக்கின்றனர். ஆனால் அவர்கள் முயற்சி ஒரு போதும் சித்தி யடைந்ததாயில்லை. ஆக்வே இவ்வுண்மை, கொலைப் பரிசோதனைக்கு ஒருபெரும் ஆதாரமாயிருக்கின்றது. நாம் உலாவப் போய்விட்டு வீட்டினுள் திரும்ப நுழைந்த காலை நம பாட்டனார் தரையிற் கிடப்பதையும் அவர் கழுத்தில் ஒரு கயிறு சுற்றப்பட்டிருப்பதையும், கயிற்றின் மற்றைப் பாதி சுவரில் தறைத்திருந்த ஆணியிலிருந்து நான்று கொண்டிருப்பதையும் பார்க்க நேர்ந்தால், . நம் பாட்டனார் நாமில்லாத தருணம் பார்த்து தற்கொலை செய்து கொண்டார், அவர் கட்டியிருந்த கயிறு கனம் பொறுக்கமாட்டமல் அறுபட அவர் கீழே விழுந்து கிடக்கின்றார் என்று நாம் உடனேயே தீர்மானித்துத் துயரங்கொள்வோம். ஆனால் கயிற்றில் கண்ணிகளிடும் விஷயமாய் ஒருகப்பலோட்டிக்கு எவ்வளவு அறிவுண்டோ அவ்வளவு அறிவும் உண்டு. மருத்துவ சாஸ்திரமும் நியாய சாஸ்திரமும் நன்குணர்ந்த ஒரு துப்பறிபவனுக்கு, தற்கொலை செய்பவன் ஒரு விதத்திலும், கொலை செய்பவன் இன்னொரு விதத்திலும் முடிச்சுகள் இடுவான் என்று நன்றாய்த் தெரியவரும்.

மேற்சொன்ன மாதிரி பாரிஸில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு வயோதிகர் வெளிப் பார்வைக்கெல்லாம் தற்கொலை செய்து கொண்டார் என்றே விளங்கிற்று. ஆனால் துப்பறிவதில் தேர்ந்த ஒருவர் வந்து

பார்த்துவிட்டு "கயிற்றைக் கட்டிக் கொள்ளவில்லை. யாரோ இவரைக் கொன்றுவிட்டு உத்தரத்திலும் இவர் கழுத்திலும் கயிற்றைக் கட்டியிருக்கிறார்கள்" என்று அபிப்பிராயப்பட்டார். உடனே அங்கு நின்ற இருவர் "இவருடைய மருமகன் இவரைக் கொலை செய்து கயிற்றைக் கட்டியதை நாங்கள் எங்கள் ஜன்னல் வழியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தோம்" என்று சாக்ஷி சொன்னார்கள்.

கொலை செய்யப் புகும் ஒருவன் தேக சாஸ்திரத்தில் (Physiology) தேர்ச்சி யடைந்திருப்பது அவனுக்கு நலமாயிருக்கும். சில மருந்து வகைகள் மனிதனுடைய தேகத்தை எப்படி பிரதிபாதிக்கின்றன வென்று அவன் அறிந்திருக்க வேண்டும். அவன் பிரேதத்தை மறைத்துவைக்க எண்ணங் கொள்வானால் அதன்மேல் என்னென்ன புற் பூண்டுகள் உண்டாவன என்று கற்றறியவேண்டும். இம்மாதிரி வித்தையில் பாரிஸ் ஸர்வகலா சாலையிலிருக்கும் இயற்கை சாஸ்திர ப்ரொபஸரான மாக்வின்டானுடன் (Maquin Tandon) என்பவர் மிகத்தேர்ந்தவர். இவரிடத்தில், நியாய சாஸ்திரமுந்தெரிந்த அநேக வைத்தியர்கள் உபதேசம் பெற்றிருக்கிறார்கள்.

ஒரு சிறு பெண் குழந்தையின் தேகம் ஒரு சோப்புப் பெட்டியில் இறுக்கமாய் அடைக்கப் பட்டிருப்பதாய்க் கண்டு பிடிக்கப்பட்டது. வேறொரு பட்டணத்திற்குச் சென்றிருந்த அந்தப் பிள்ளையின் தாயைக் கண்டு கேட்டபொழுது கொலை இரண்டு மாதங்களுக்கு முன் நடந்தது என்றும், கொன்றது தனக்கிஷ்டமாயிருந்த வேறொருத்தி யென்றும் கூறிவிட்டாள். அப்பொழுது ஜூலை மாதம் முடிவு. அந்தப்பிள்ளையின் தேகத்திலிருந்த அணுவளவான புழுக்களை ஒரு டாக்டர் உற்றுநோக்கி யறிந்து பிள்ளை பெப்ருவரி மாதம் கொலை யுண்டிருக்க வேண்டுமென்று சொன்னார். குறுகுறுக்கின்ற குற்ற நெஞ்சுடைய தாய், பிள்ளையை பெப்ருவரி மாதம் 27-உ கொன்றதாக ஒப்புக் கொண்டாள். இதுபோல் ஒரு வீட்டின் புகைப் போக்கியில் (Chimney) மறைத்து வைத்திருந்த ஒரு பெண் குழந்தையின் தேகத்திலுண்டான புழுக்களைப் பார்வையிடவே குழந்தை இரண்டு வருஷங்களுக்கு முன் இறந்திருக்க வேண்டுமென்று புலப்பட்டது. இதனால் நிரபராதியான ஒருவன் தண்டனையினின்று பிழைத்தான். சில புற் பூண்டுகள் உயிர்ப்பிராணி இறந்ததும் அதன் தேகத்தில் தோன்றி மறைந்து பின்னும் தோன்றி அழிகின்றன. ஆனால் இவையின் ஜீவியகாலம் இவ்வளவு என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. இது பிரேதம் விழுந்த கால அளவைக் குறிப்பிட ஒரு ஏற்ற வழியாயிருக்கிறது.

நெருப்பானது உயிருள்ள சரீரத்தையும் மிருத சரீரத்தையும் எங்ஙனம் பிரதிபாதிக்கின்றது என்றறியா ஒருவன் அயலாரிடம் ஓடிச்சென்று, தன் மனைவி இடுப்பு முதல் கால் முட்டுவரையிலும் கழுத்திலும் தீயினால் வேவுற்று அடுப்பண்டை கிடப்பதாகச் சொன்னான். அவனிலும் மிகுந்த அறிவுடைய டாக்டர் இறந்து கிடந்த பெண் பிள்ளையைக் கூர்மையாய்ப் பார்த்து விட்டு, மரணத்துக்கு முன் உண்டாகும் புண்களில் கள்ள நீர் (Serum) இருக்குமென்றும் தொலிக்கடியில் கொப்புளங்கள் தோன்றுமென்றும், அக்குறிகள் ஒன்றும் அவள் தேகத்தில் காணப் படவில்லை யென்றும் சொன்னார். மேலும் தீ இடுப்பிலிருந்து கழுத்துக்கு எப்படித்தாவி விட முடியும் என்ற சங்கையும் பிறந்தது. இவ்வளவும் தெளிவானதும் அம்மனிதன், தானே அவளை மூச்சைப் பிடித்துக் கொன்றதாகவும் பின்னர் தீயினாற் சுட்டதாகவும் ஒப்புக் கொண்டான்.

தன் சிறிய தகப்பனைக் கொன்ற ஒரு மாணவன் பிரேதத்தைத் தண்ணீரில் அமிழ்த்தி விட எண்ணி ஒன்பது கஜம் நீளமுள்ள ஈயக்குழாயை எடுத்து பிரேதத்தின் மேல் நன்றாய்ச் சுற்றினான். ஆனால் உள்ளிருந்த காற்று வெளிப் போகுமாறு குழாயில் சில துவாரங்கள் இடாத குறையினால் பிரேதம் முதலாவது தண்ணீருக்குள் அமிழ்ந்தினாலும் பிற்பாடு மிதந்து விட்டது. குற்றவாளியும் அகப்பட்டுக் கொண்டான்.

இயற்கைசாஸ்திரத்தின் கண்கள் மிகக்கூரியவை. அதனிடத்தில் நாம் ஒன்றையும் மறைக்க முடியாது. கொலை செய்துவிட்டு தப்பிக் கொள்ளலாம் என்று எண்ணியிருந்தவர் பாடு மிகக் கஷ்டமாகவே முடிந்திருக்கின்றது. மனித தேகத்திலிருக்கும் இரத்தம், உரோமம், எலும்பு முதலிய ஒவ்வொன்றுக்கும் தனித்தனி விசேஷ குணங்கள் உள்ளன. சில நாவல்களிலும் நாடகங்களிலும் கொலைக் குற்றத்தைப் புலப்படுத்த இரத்தம் புரண்ட கத்திமட்டிலும் இதற்கு முன் உதவி

வந்தது போல் இனி உதவாது. ஒரு நாவல் ஒன்றின் கதைச் சுருக்கம் அந்த கதாநாயகன் ரேடியம் (Radium) என்ற அபாயகரமான வஸ்துவினுல் கொல்லப்பட்டான் என்றிருக்குமானுல் அடுத்தாற் போல் சத்தி நூற்பண்டிதன் மின்சார தர்சினி (Electroscope) யுடனும் வந்து அவ்விதம் கொலை நடந்ததையும் நடவாததையும் ருசுப்படுத்தி விடுகின்றான்.

T. V. அருணசலம் பிள்ளை.

---

## ஆகாரமும் பானமும்.

ஸ்ரீமாந் V. R. சுந்தரராஜ சர்மா அவர்கள்.

---

நாம் இப்பொழுது இரண்டாவது விஷயமாகிய பானத்தை எடுத்துக் கொள்வோம். "நாகரீகம் அடைந்தவர்கள் குடிக்க வேண்டு" மென்று சாராயக் கடைக்காரர் (Wine merchants) பிரசுரம் செய்கின்றனர். படித்தவர்களும் நாகரீகம் அடைந்தவர்களும் சாராயம் (Alcohol) உபயோகிக்காவிடின் அவர்கள் இவ்வாறு எழுதுவதற்குக் காரணமில்லை. அவர்கள் குடிப்பது அவசியமென்றே, சரீர புஷ்டிக்கு ஏற்றதென்றே எண்ணுகின்றனர்.

சாராயம் சுகமான தேகத்திற்கு யாதொரு பயனும் தருவதில்லை. அதைச் சிறிதளவு உட்கொள்ளின் சிறிது ஜீரண சக்தியைக் கொடுக்கும். அதிகமாய்ப் பானம் செய்யின் தேகத் தளர்ச்சியை உண்டாக்கும். அது இருதயத்தையும் (heart) சுற்றுமுள்ள இரத்த நரம்புகளையும் கொஞ்சம் துரிதமாய் வேலை செய்யுமாறு சிறிது உஷ்ணத்தை வெளிப்படுத்துகின்றது. இவ்விதம் உஷ்ணம் வெளிப்படுதலால் சரீரத்திலுள்ள அக்கினி குறைவு படுகின்றது. தேகத்திலுள்ள சூடு வெளியாகும் பொழுது சிறிது உஷ்ணமான உணர்ச்சி உண்டாவதால் சிலர் சாராயம் குளிரைப் போக்குவதற்கு உபயோகமாமென்று கூறுகின்றனர். ஆனல் அது முற்றும் பிசகு. இவ்விதம் எண்ணி அநேகரது உயிருக்கே ஆபத்து நேர்ந்திருக்கிறது. அநேக நாள் உபயோகிப்பதால் நமது தேகத்திலுள்ள உறுப்புகள் கூட மாறுபாட்டை அடைகின்றன.

நமக்கு அடிக்கடி ஏற்படும் வியாதிகளைத் தடுப்பதற்காக நமது தேகத்தில் ஏற்பட்டிருக்கும் சக்தியை சாராயம் உபயோகிப்பது கெடுத்து விடுகின்றது. நமது சரீரமானது வியாதிகளைக் கொண்டு வரும் கிருமிகளால் அடிக்கடி தாக்கப் படுகின்ற தென்பது நம்மவருள் அநேகருக்குத் தெரிந்த விஷயம். அச்சிறு புழுக்களுடன் சமர் தொடுத்து நம்மைக் காக்கும் ஓர் அற்புத சக்தி நமது இரத்தத்திற்கு அமைந்திருக்கின்றது என சாஸ்திர ஆராய்ச்சி செய்வோர் கண்டு பிடித்திருக்கின்றனர். சாராயம் குடிப்பதால் நமது உதிரத்திற்குள்ள அவ்வித சக்தி குறைந்து விடுகின்றது. ஆகவே அக்கிருமிகளைத் தடுப்பதற்கு வழியின்றி அவைகளின் வசப்பட்டு வியாதியால் பீடிக்கப் பட்டு தத்தளிக்கின்றது.

குடியால் அழிந்த குடிகள் எத்தனை! எத்தனை பேதைப் பெண்களும், குழவிகளும் யாதொரு கதியுமற்று தெருவிலோட்டப் பட்டனர்." குடிப்பதற்கு மாத்திரம் ஒருவனிடம் சென்று அன்பாய் வார்த்தையாடிக்களித்து வந்த நண்பர்களில் ஒருவனாகிலும், கடன்காரர் கழுத்தில் கைபோடும் போது உதவி செய்ய முன்வருவானே? ஆனதுபற்றியே 'காதல், கவறாடல், கள்ளுண்டல், பொய் மொழிதல் முதலியவைகளை மேலோர்கள் முற்றும் வெறுக்கின்றனர்.

நமது தேசத்தில் குடி தாழ்ந்த ஜாதியார்களிடத்து மட்டுமே ஏற்பட்டிருந்தது. ஆனல் மேனாட்டு நாகரீகம் அதிகப்பட அதிகப்பட மதுவுண்ணலும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. சாராயக் கடைகளில் 'ஒரு கையில் கிருஸ்துவர்களின் சத்தியவேதமும்; மற்றொரு கையில் உவிஸ்கிக் (whiskey) குப்பியும் வைத்துக் கொண்டிருக்கும் குருவின் படத்தைக் காணலாம். தகப்பன், பாட்டன் முதலியவர்களுக்குக் குடி இன்னதென்றே தெரியாதிருந்தும் அவர்கள் சுகமாகவும், கௌரவமாகவும் வாழ்ந்திருக்க, குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பு போல அக்குடிகளில் உதித்த பலர், தம் முன்னோர்களின் பெயரைக் கெடுப்பதற்கு குடி கற்றுக் கொண்டது மன்றி, தமக்கே அகால மரணத்தையும் தேடிக்கொள்ளுகின்றனர்.

தென் ஆப்பிரிக்காவில் வெள்ளைக்காரர் சுதேசிகளையும் குடிக்கக் கற்பிக்கிறார்களாம் ஏனெனில் சுதேசிகளைவிட தங்களுக்குச் சம்பளம் பலமடங்கு

அதிகமாயிருந்தும் சிக்கனமாய்ச் செலவு செய்யத் தெரியாமையால் மீதி வைக்க முடியவில்லை. ஆனால் சுதேசிகள் மிகவும் கெட்டுமெட்டாய்ச் செலவு செய்து தங்களுடைய மேலதிகாரிகளின் விரோத மிருந்தும் முன்னுக்கு வந்து விடுகின்றனர். இது வெள்ளைக்காரர்களுக்கு இஷ்டமில்லையாகையால், தங்களைப்போல ஆக்கவேண்டுமாயின் அவர்களையும் சாராயம் குடிக்கக் கற்பித்து அவர்களின் செலவை அதிகப்படுத்தி, அவர்களுடைய அவசியங்களை அதிகப் படுத்த வேண்டுமென்று எண்ணுகிறார்கள். இது பொறாமையான எண்ணமல்லவா! இங்கிலாந்தில் கூட குடி நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது. ஆர்மி டெம்பரன்ஸ் அசோஸியேஷன் (The Army Temperance Association) சபையானது சரியானபடி வேலை செய்து கொண்டு வருகின்றதாம். அதினால் முன்பு இருந்ததைவிட இப்பொழுதுள்ள சிப்பாய்கள் நல்ல காரியமுடையவர்களாக இருக்கிறார்களாம். நமது இந்திய நண்பர்களும் இதைப்போல சரியானபடி ஒழுகி, நமது முன்னோர்களின் நடக்கையைக் கடைப் பிடித்துவரின் நம்நாடு எத்தகைய நன்மையை அடையும்!

கடைசியாக, தின்பதாலும், குடிப்பதாலும் நமக்கு மோக்ஷம் கிடைப்பதில்லை. இகத்திலும் சுகமென்பது சிறிதுமில்லை. நமது சன்னியாசிகளும், யோகிகளும், செயிண்டு பால் (St. Paul) அரிஸ்டோடில் (Aristotel) முதலிய மேல் நாட்டார்களும், உலக ஆடம்பரத்தில் சிறிதும் விருப்பம் வையாமல் எத்தகைய மேன்மையான பெயர் படைத்துளர். நாமும் நமது ஆகாரத்தில் அதிகம் விருப்பம் வையாமல் குடியை அறவே யொழித்து நமது மனோ பலத்தை விருத்தி செய்யின் எத்தகைய மேன்மை யுண்டாகும்.

V. R. சுந்தரராஜ சர்மா.

---

## நாஞ்சிநாட்டு மருமக்கள்வழி மான்மியம்

76ம்-பக்கத் தொடர்ச்சி

### வாழ்த்துப் படலம்.

இக்கொடு மொழிகளாம்
கருதற் கரிய கருடாஸ்திரங்கள்
பலவும் நெஞ்சிற் பாய, மருமகன்
புண்பட் டுள்ளம் பொறுக்க முடியாது
ஐயோ! என்றுகண் ணீர்விட் டழுது
தந்தை தாயர் தம்மிடம் சென்று,
விளைந்த வெல்லாம் விரிவா யுரைத்தான்;
கோபம் பொங்கிக் கொதித்து வரும்படி
சிற்சில இடையிடை சேர்த்தும் கொண்டான்.
செப்பிய சொற்கள் தீயிற் காய்ச்சிய
கம்பிகள் போலிரு காதும நுழைந்திட
வீர பத்திர பிள்ளை வெகுண்டு
கால்கிமி ஷத்தென் கணவரைக் கண்டு,
"அடடா மூடா! அதர்ம சண்டாளா!
வஞ்சகா! கொடிய மறவா! குறவா!
நெஞ்சில் இரக்கம் இல்லா நீசா!
மடையா! நீயென்மகனை நோக்கி
ஊத்தை வாயால் உளறின மொழிகளை
இன்னும் ஒருமுறை என்முன் வந்து
சொல்லடாபார்ப்போம்! சொல்லடாபார்ப்போம்!
பள்ளிப் பையனைப் பதினொ ரூண்டு
திகையாப் பாலனை தெரியாச் சிறுவனை
கன்னியும் காப்பும் காணாக் குமரனை
கள்ளன் என்றும் கபடன் என்றும்
கள்ளை யுண்டு களிப்பவன் என்றும்
தடியன் என்றும் மடியன் என்றும்
தாசிகள் வீட்டுத் தானிகன் என்றும்
பழித்துப் பேசிய பாதகா! உன்றன்
நாவை யரிந்து நாய்முன் எறிந்தால்
அன்றி யென்சினம் ஆறாதே யடா.
உன்மகன் சாமி ஒழுங்குகள் எல்லாம்
யானறி யேனென் றிருந்தா யோடா?
அவன்,
பரத்தை நாடிப் பொன்னைத் தாமும

* பரத்தைநாடி யென்பது மோக்ஷத்தை விரும்பி யென்றும் தாசியை விரும்பி யென்றும் பொருள் படும்.

*கன்னிப் பதிக்குப் போகும் காரணம்
பக்தியின் மிகுதியோ பணத்தின் மிகுதியோ
உண்டு கொழுத்த ஊரத்தின் மிகுதியோ
உண்மை யறிய உனக்கு முடியுமோ?
கள்ளுக் குடிக்கிற காரிய மெல்லாம்
¶மந்தா ரம்புதூர் மதவிளை நாடான்
கிட்டின முத்துவைக் கேட்டால் தெரியும்.
நான்சொன் னால்நீ நம்புவை யோடா?
பள்ளியில் உன்மகன் படித்துப் பெரிய
பரீக்ஷையும் கொடுத்துப் பட்டமும் பெற்றொரு
மாதவ ராயராய் வரட்டு மப்பா!
நாடும் நகரும் நடுங்கட்டு மப்பா!
அழகு அழகு அதிசயம் அதிசயம்!
பெற்ற புத்திரன் பெரும்பிழை செய்யினும்
சிறுவன் செய்த சிறுபிழை யென்பாய்,
சினந்திட மாட்டாய், சிரித்து விடுவாய்;
ஏசினும் பேசினும் எட்டி யடிப்பினும்
மறுத்துரை செய்யாய் பொறுத்துக் கொள்வாய்.
“மக்கள் மெய் தீண்ட லுடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கெனச் சொல்
உண்மைக் குறளின் உட்பொருள் அறிந்துளும்
நடப்பவர் உன்போல் நானிலத் தில்லை!
ஆனால்,
மருமகன வந்து வணங்கி நின்று
வாழ்த்த வெண்ணி வாயைத் திறக்குமுன்
வைதான் என்று பொய்தான் சொல்வாய்;
அடியேன என்றவன் அங்கை கூப்பினும்
அடித்தான் என்றநி யாயமே கூறுவாய்;
காரணவா உன் காரிய மெல்லாம்
அற்புதம் அற்புதம் அற்புதமப்பா!
ஒருகண் வெண்ணெயும் ஒரு கண் நீறும்
வைப்பது முனக்கு வழக்கம் தானடா
இதற்குச் சாத்திரம் எங்கே பார்த்து
வைத்திருக் கின்றீர் மாப்பிள்ளைத் துரையே!
போட்டும்,
ஆண்டு தோறும் அறுப்புக் காலமுன்
நாலாம் மனைவி நாடகக் காரி
வித்துத் தண்டும் வாளை மீனும்
முருங்கைக் காயும மொச்சைக் கொட்டையும்
வட்டி வட்டியாய் வாங்கி வாங்கிக்
கறிகள் வைத்துக் கஞ்சியும் வைத்துக்
கஞ்சியை,

*கன்னியகுமரி.
¶கன்னியாகுமரிக்குப் போகும் வழியருகிலுள்ள ஓர் ஊர்.

ஆற்றி ஆற்றி அரையரை அகப்பையாய்
விட்டுக் கொண்டு விசிறி எடுத்து
வியர்வை மாற வீசிக் கொண்டு
பற்பல பேச்சிலும் பக்குவ மாக
உண்மையும் பொய்யும் ஒருங்கு கலந்து
காலம் போக்கும் காரணம் இன்னதென்
* றப்ப முத்துநீ அறிவா யோடா?
கொட்டுக் குடவைப் புட்டும் தின்று, மேல்
குறுணிக் காப்பியும் குடித்தால் போதுமா?
வீட்டுக் காரியம் விசாரித் தறிய
மதியில் லாதவன் மனிதனா மாடா?
சாளையும் சோறும் சண்ணும் சப்பா
களத்துச் சுவரைக் கடந்து போவது
எத்தனை வட்டி நெல் என்றறி வாயோ?
கூடிப் பிறந்தவள் கும்பி கொதித்து
வந்துநின் றாலும் மாபா தகன் நீ
ஆழக்கு நெல்லு மளித்திடு வாயோ?
அலர்தலை யுலகில் அறவழி யில்லா
அரசர் மகுடம் அனைத்தையு மொன்றாய்
அடித்து நொறுக்கி அழலிற் காய்ச்சி
மாசெலா மகற்றி வையகம் தொழுதகன்
அடியில் இடுஞ்செருப் பாணிகள் ஆக்கவும்,
அவர்,
கொடுங்கோல் எல்லாம் குதிரைப் பாகர்
தாங்குதற் குரிய சவுக்குகள், ஆக்கவும்,
ஈட்டி வாளிவை யாவையு முறித்துப்
பண்பட நிலமுழு படைகள் ஆக்கவும்,
கொடிகள் கொற்றக் குடைக ளிவற்றைச்
சிறுசிறு துண்டாய்க் கீறிச் சிறுமியர்
பாவைக் கணிபா வாடைகள் ஆக்கவும்,
நாடும் நகரும் நாசம் செய்யும்
பென்னம் பெரிய பீரங் கிகளை
இந்திய நாட்டில் இழுத்துக் கொணர்ந்து
செந்நெல் கோதுமை நீங்கரும் பென்று
பன்னப்படுபல பயிர்களு மோங்கு நம்
நிலங்களில் என்றும் நீர்வளம் பெருகக்
கங்கை யமுனை காவிரி முதலிய
வற்றிலா நதிகளில் மடைகள் ஆக்கவும்,
கங்கணம் கட்டியெம் காவலர் காவலன்
ஐந்தாம் ஜ்யார் ஜாம் அமரா பரணன்
பூதலம் மீதலம் பாதலம் நடுங்க
ஏம கால தூதரும் இளைக்கக்

* கொஞ்ச காலத்துக்குமுன் நாகர்கோவிலில் இருந்த ஓர் மூடன்.

கடும் போர் செய்யுமிக் காலந் தன்னில்,
காரண வர்களே! காரண வர்களே!
குடும்பந் தோறும் கொடுங்கோ லரசு
நிலைத்திட முயல்வது நீதி தானாகுமோ?
அது
நீணிலத் தினியொரு நிமிஷம் நிற்குமோ?
ஐயோ! இவர் செயும் அநியாயங்களை
அறிபவர் யாரே! அறிபவர் யாரே!
கொடுங்கோ லரசர் குடிகளைப் போலிக்
காரண வாகளின் கைக்கீழ் தங்கி
இரவும் பகலும் எவ்வெப் பொழுதும்
தாருக் கண்ணீர் வடிய விட்டுத்
தீராத் துயரம் தீருநாள் எண்ணி
நைந்து நொந்து நாளைக் கழிப்பவர்
எத்தனை! எத்தனை! எத்தனை! என்பேன்!"
என்றெலாம் சொல்லி இனிய மொழிகளால்
வாழ்த்தி நல்ல வரங்களும் கொடுத்துத்
தெருவிலிறங்கினர்; சிறிது தூரம்
சென்று பின்னும் சீறிச் சினந்து
வந்தார்; வந்த விரவில் மண்டை
படீரென வாசற்படியில் மோத
முன்னினும் கோபம் மூண்டு "மூடா!
வஞ்சகா! உன்குடி வண்டியைக் கலக்கிப்
போடுகிறேன் பார்..............................
¶..........................................
..........................................
பட்படவென்று பறபல மொழிகளைப்
பொரித்துக் கொட்டிப் போனாரம்மா!
கணவரோ
*வைய வைய வைரக் கல்லும்
திட்டத் திட்டத் திண்டுக் கல்லும
ஆகியிருந்தனர்.

[தொடரும்]

---

## குடிவெறி.

(நித்தியானந்தத்தைநாடு என்ற மெட்டு)

இராகம் இந்துஸ்தான்காபி. தாளம் ஆதி

பல்லவி

குடிவெறிதன்னைநாடாதே—வெறியர்
கூட்டத்திற் கூடாதே தம்பி

அனுபல்லவி

அடஅடஇதாகும் ஆண்மைக்குமோசம்
ஐயையோஇதனால் அடுத்திடும்நாசம்—குடி

சரணங்கள்

உலகமெல்லாம்பார் குடிவெறிக்கோலம்
உண்மையுரைத்தால் இது அவகாலம்
கலகமுதலிய காட்சிவிசாலம்
காண்போம்மதுவால் கணக்கற்றநலம்—குடி

அற்பக் காரியத்தி லடிபிடி தொடுப்பார்
அந்தரங்கச்செய்தி யையும்வெளிவிடுப்பார்
பற்பலர்தவித்திடப் பணமள்ளிக்கொடுப்பார்
பரம்பியஆவலாற் பெருஞ்சத்தியெடுப்பார்—குடி

மக்களும்மனைவியு மனமிகவேங்க
வருவதெண்ணமலே வசைபலவோங்க
தக்கபெரியர்கண்டு சலித்துப்பின்வாங்கத்
தள்ளாடிவீழுவர் தழுவுடைநீங்க—குடி

அற்பமுங்கூசாமல் அசத்தியமுரைப்பார்
ஆருமெதிர்பேசில் அடாதுசெய்திரைப்பார்
சொற்பகருமத்திற் சுணக்கன்போற்குரைப்பார்
தொடருஞ்சந்ததிக்குக் கெடுவிரைவிரைப்பர்—கு

புத்திமழுக்கும்வஸ்துவைப் புசிப்பதுபாவம்
பொருமிடக்குடித்தால் வருமென்னலாபம்
மஸ்துவாலூழன்றிடில் வருந்தேவகோபம்
வையிலுனைநம்பினோர் வாழ்வுபரிதாபம்—குடி

தவரணக்கருகிலே மொட்டாரிரதம்
சட்டைதொப்பிக்காரர் சைக்கிட்பாதம்
அவமொழிபபிரயோக மாமனவாதம்
ஐயையோஅங்குசெல் லாதுசெய்விரதம்—குடி

அடக்கிடுவாரிதை யடக்கிடவில்லை
ஆ இதனாலே அடங்காததொல்லை
விடத்துணிந்தாலும் விடுவதும்வல்லை
வேண்டாமருந்துக்கும்விரும்பிக்கேள்சொல்லை கு

குடிவெறிகாரரோர் கும்மாளக்கூட்டம்
கூடினல்நித்தமுங் தவரணைக்கோட்டம்
மடிப்பணமில்லையேல் திருட்டினில்நாட்டம்
வசனித்திட்டாலதை வனுபோராட்டம்—குடி

தீர்குடலைச் சீக்கிரங்கருக்கும்
தித்திப்புமதுவுடல் சீரணஞ்சுருக்கும்
வாயிரைப்பையிற்புண் வீங்கதுபெருக்கும்
வரவரப்பெலவீனம் மருவியேநெருக்கும்—குடி

(சன்மார்க்கபோதினி)

---

¶பொடிவு.
*வைய வைய, திட்டதிட்ட மிக வைராக்கியம் கொண்டனர்.

## உத்தரராம சரிதம்.

58—வது பக்கத் தொடர்ச்சி.

ஸ்ரீமாந். C. N. அநந்தராமய்ய சாஸ்திரியவர்கள் M. A.

---

ஸீதை:—இந்தப் படத்தில் உத்தமர் விரும்பும் தீரமுங் குன்றிவாய்விட்டலறியதைக் காட்டியிருக்கிறது.

ஸ்ரீராம:—தேவி! இப்பொய்கை மிக்க அழகு வாய்ந்தது. இப்பொய்கைக் கண் மதமேறிய அந்த மிகு அன்னங்கள் சிறகெறிந்தலான் வெளித்தோன்றும் பருத்த தண்டுடைத் தாமரையையும் ஆம்பலையும் யான் கண்ணீர் விழுந்தெழு மிடைமிடையே கண்டதுண்டு.

இலக்:—இதோ உத்தமரான அநுமார்.

ஸீதை:—வெகு காலம் வாதைக்குட் பட்ட உயிர்க்கு நிவர்த்தி யுண்டாக்கி பேருதவி புரிந்த மாருதி இவரே!

ஸ்ரீரா:— ஆஹா என் பாக்கியமே! அஞ்சனைக்கு மகிழ்வூட்டிய பெருக்கையரே யிவர். இவர் வீரத்தானன்றோ யாமும் உலகம் யாவையும் உதவி பெற்றோம்.

ஸீதை:—லக்ஷ்மணா! பூத்திருக்கும் கடம்ப மரங்களினின்று மஞ்ஞை நடம்புரியும் இம்மலையின் பேரென்ன? இதோ ஓர் மரத்தின் கீழ் மேனி வாடியுர்தேசு குன்று உத்தமர் மூர்ச்சையிலிருக்க நீ அவரைத் தாங்கிக் கொண்டிருப்பதாக வரைந்திருக்கிறதே.

இலக்:—கொடுமுடி மீது இருள் மேகந்தவழ்ந்து, நீர் மருதின் மணம் வாய்த்து மால்யவானெனும்பேர் பெற்ற மலையே யிது. அண்ணலிவண் தங்குங்கால்—

ஸ்ரீரா:—போதும் போதும் இனிமேல் என்னாலாகாது ஸீதையின் பிரிவு திரும்பவும் உற்றது போல் இருக்கிறது.

இலக்:—இதற்கப்பால் காணத்தகுவன அண்ணலது மஅரக்கர் தமதும், எண்ணிறந்த ஒன்றின் மிக்கொன்றுகிய (வேலைப்பாடுகள்) செய்கை விசேடங்களே. உத்தமியோ மிக இளைப்புற்றுள்ளாள் ஆதலால், சற்றுக் களைப்பாறலாம் என்று வேண்டிக்கொள்கிறேன்.

ஸீதை:—உத்தமரே! சித்திரங் கண்டதனன் ஆசை கொண்ட எனக்கு ஓர் சிறிய விருப்பு உண்டு.

ஸ்ரீரா:— அதற்கென்ன கட்டளை யிடுகிறது தானே.

ஸீதை:—பின்னுமோர் தடவை யான் சாந்தமும் கோரமும் ஒருங்கே பெற்ற வனத்திடைச் சென்றுகளித்துத் தண்மையும் தூய்மையும் மலிந்த கங்கை ஆறறில் முழுக விரும்புகிறேன்.

ஸ்ரீரா:—தம்பீ லக்ஷ்மணா!

இலக்:—இதோ இருக்கிறேன்.

ஸ்ரீராம:—கருவுற்றாள் ஆசையை உடனே தணித்தல் வேண்டும் என நம் பெரியோர் இப்பொழுது தான் கூறியனுப்பி யிருக்கிறார்கள். ஆதலால் ஓடுங்கால் குலுங்காத ஓர் தேரைக் கொண்டுவா.

ஸீதை:—உத்தமரே! தாங்களும் உடனருளல் வேண்டும்.

ஸ்ரீராம:-ஏ கன்னெஞ்சாய்! இதுவும் பகரவேண்டுமோ!

ஸீதை:—அப்படிக்கானால் எனக்கு வெகு திருப்தி.

இலக்:—அண்ணல் அருளுமாறு (போதல்),

ஸ்ரீரா:—காதலி! சற்று சுதவணியண்டை வீற்றிரு.

ஸீதை:—அப்படியே. இளைப்பு மேலிட்டதால் தூக்கம் வருகின்றது.

ஸ்ரீரா:—ஆனால் விழாவண்ணம் என்மேல் சாய்ந்து கொள். பயததாலும் அநுப்பாலும் உண்டாய வெயர்வையால் சந்திரகிரணங்களால் நீர் துளிக்கும் சந்திரகாந்தக் கல்லாலாய மாலையின் மென்மை பெற்ற நின் கைபால் என் மன முவக்க என் கழுத்தைக் கட்டிக்கொள். (அவ்வாறு செய்வித்து உவப்புமிக்கு) காதலி! இது என்ன. இது இன்பமா, துன்பமா, காதலா, உறக்கமா, விஷமேறுதலா, மதங்கொள்ளுதலா, யாதென்றுணர்கிலேன். நின்னைத் தொடுங்கால் இந்திரியங்களை யெல்லாம் செழிப்பிக்கும் ஓர் குரும்பு என் மனத்தில குவிபவும் மலரவுஞ் செய்கிறது.

ஸீதை:—(புன்முறுவல் பூத்து) தங்களுக்கு என்மீது குன்றாக் காதலே பிறிதென்ன.

ஸ்ரீரா:—வாடிய என்னுயிராய நறுமலரை நின் தீஞ்சொற்கள் மலர்வித்து என்னை மகிழ்வித்துப் பொறிகளை யடக்கின. அவை என் செவிக்கு நல்லுணவே. இன்னுயிர்க்குத் தெள்ளமுதே.

ஸீதை:—வாரும், சாய்வோம்! (தூங்கவேண்டி நாற்புறமுஞ் சுற்றிப் பார்த்தல்)

ஸ்ரீராம:—கண்மணீ! என்ன பார்க்கிறாய்? நின் கை பிடித்த நாள் முதலா வீட்டிலும் அவ்வாறே காட்டிலும், இளமையிலும் அவ்வாறே யௌவனத்திலும் பிற மகளிர் தீண்டாப் பெரும் பேறுற்ற,நின்னுறக்கத்துக்குத்தலையணையாயஇராமனது கையன்றோ இது.

ஸீதை:—(உறங்குவதாய் நடித்து) அது அப்படியே. உத்தமா! அப்படியே (தூங்குதல்)

ஸ்ரீராம:—தேம்படு மொழியாள் என் மார் மீது சாய்ந்து உறங்கி விட்டாள் போலும். (பார்த்தன்புடன் மொழிதல்). இவள் மனைக்கோர் திருவே. கண்ணுக்கோர் அமுதப் பெருக்கே, இவளது பரிசமோ மேனிக்கோர் சந்தனக் குழம்பே. இக்கையோ கழுத்திற் கோர் குளிர் முத்துமாலை, இவட்குரியது யாதுதான் மனமகிழ் வூட்டாதது. ஆயின் இவள் பிரிவொன்றுமட்டும் ஆற்றற்பாலதன்று.

(நடைமாது புகுதல்.)

நடைமாது:—அரசே! வந்துளார்.

ஸ்ரீரா:—அது யார்.

நடை:—தங்கள் உழை நின்று குற்றேவல் புரியும் துர்முகன்.

ஸ்ரீரா:—[உள்ளூற] குடிகள் என்னைக் குறித்து யாது மொழிகின்றனர் என்பதறிய வேண்டியன்றோ அந்தப் புரத்துப் பணிவிடையாளனான துர்முகனை அனுப்பினது. (வெளிவிட்டு) அவன் வருக. (நடைமாது மறைதல்)

(துர்முகன் புகுதல்)

துர்முகன்:—(உள்ளூற) ஹா! கஷ்டம். கஷ்டம். இவ்வாறு சீதாதேவிக்கு நேர்ந்துள்ள நினைக்கவொண்ணாத ஊர்வசையை நான் எங்ஙனம் தேவர்க் கறிவிப்பேன். என் செய்வேன்? பாக்கியங்குறைந்த என்னையல்லவோ இதற் கனுப்பினர்.

ஸீதை:—(கனவின் மொழிதல்) ஹா! உத்தமரே! எங்கே இருக்கிறீர்.

ஸ்ரீரா:....சித்திரத்தைக் கண்ணுற்றதனால் நினைவு வந்த பிரிவு தான் தேவியைக் கனவிலும் துன்புறுத்துகிறது. (அன்பாற் சீதையின் உடம்பைத்தடவி, வாழ்விலும் தாழ்விலும் வேற்றுமையின்றி எந்நிலையினுந் தொடர்வதும், மகத்துக்கோர் பற்றுக் கோடாவதும், முதுமையால் பிணங்காததும், நாளேற நாண் முதலிய குன்றுதலான் அன்பின் தனிச் சுவையாய் இறுதியில் நிலைபெற்றிருப்பதும் ஆகிய மனைவியின் காதல் அரும் தவப் பயனே.

துர்:—(இராமனை யணுகி) வெற்றி பெருகுக! வெற்றி பெருகுக!

ஸ்ரீரா:—யாது கிட்டியது அறிவி.

துர்:—"ஸ்ரீராமபிரான் தசரதரையும் மறக்கும் நிலையில் ஆக்கிவிட்டார்" என்று குடிகளனைவரும் மகாராஜாவைப் புகழ்கிறார்கள். வாழ்த்துகிறார்கள்.

ஸ்ரீரா:—இது வீண் புகழன்றோ. யாதானுங் குறை கூறியதுண்டாயின் அதனைக் கூறுக. குறை உண்டெனில் போக்க முயல்வேன்.

துர்:—(அழுதுகொண்டு) அரசர் பெருமானே! கேட்டருள வேண்டும். (காதோடு மொழிதல்)

ஸ்ரீரா:—சுடுசொல் வன்மை பொறுக்க வொண்ணாததே. (மூர்ச்சையடைதல்)

துர்:—தேவரே! தணிதல் வேண்டும்.

ஸ்ரீரா:—(துயர் தணியவும்) ஹா ஹா! கஷ்டம்!! கஷ்டம்!!!. பிற மனைக்கண் வாழ்ந்ததனால்மேய வசையை சானகி தீப்பாய்ந்து மாற்ற முயன்றாளாயினும் கெடுகாலத்தால் பின்னுமது வெறிகொண்ட நாயின் நஞ்சுபோல் பற்றிப் பரவுகின்றதே. பாக்கியமிழந்த யான் இதற்கென்செய்வேன்(யோசித்துக் கவலையுடன்) மற்றெது செய்வல். நல்லோராயின் எச்செயலானும் உலகுளோரைத்திருப்தி செய்வதையே விரதமாகக் கொளல் வேண்டும். இப்பூட்கையானன்றோ எந்தை என்னையுந் தன்னுயிரையு மிழக்கவேண்டி. நேர்ந்

தது. இப்பொழுது தான் வசிஷ்ட பகவானும் ஆக்ஞை யிட்டருளினர். மேலும் இதுகாறும் என் முன்னோராய மன்னரெல்லாம் ரவிகுலத்தை மாசறு வண்ணம் காத்து வந்தனர். அக்குலத்திற்கு என்னால் இக்குறை நேருமாயின் என் போல் கெட்டவர் யாருமில்லை. ஹா! உழுபடைச் சாலில் தோன்றிய தேவி! தான் அவதரித்ததின் பயனைப் பூமிக்குத்தூய்மை யருளிய தேவி! ராஜரிஷியான ஜனகன் மாமகளே! அங்கியாலும், வசிஷ்டராலும், அருந்ததியாலும் புகழ் பெற்ற நல்லொழுக்கம் வாய்ந்ததேவி! தன்னுயிர்போல் இராமனைப் பேணிய தேவி! ஹா! காட்டில் வதிந்த பொழுது நட்புமிக்கு வாழ்ந்த தேவி! தந்தையின் அருமைப் புதல்வியே! ஹா! சில சொல்லால் அதிக இனிமை உண்டாக்கிய தேவி! இத்தகைய உத்தமிக்குக் கூட எவ்வாற்றான் இவ்விதத் தீங்கு நேர்ந்ததோ? உலகோர்க்குத் தூய்மை நின்னாலே; உலகோர் கூறுவதோ நினக்குத் தோஷம். உலகுளோர்க்கு ஆதரவு நீயாய் நீ ஆதரவின்றி இங்கு தவிக்கின்றாய்.

(துர்முகனைப் பார்த்து)

துர்முகா:—இலக்ஷ்மணனிடஞ் சொல்லு. புதுவரசனை இவ்விராமன கட்டளை யிடுகிறார்—

(காதொடு சொல்லி)

துர்முகன்:—அங்கியால் தூய்மை யுற்றவளும், புண்ணியம் வாய்ந்த ரகு குலவித்தை தன் கருப்பையுள் பெற்றவளும் ஆனதேவியை தீயோர் வசையால் இப்பொழுது தேவரீர் இவ்வாபத்துக் குள்ளாக்குவது எங்ஙனம் பொருந்தும்.

ஸ்ரீராம:—கஷ்டம் கஷ்டம்! உலகுளோர் தீயோரென எங்ஙனம் கூறுவது. இக்ஷ்வாகு வம்சத்தில் அவர்கட்கோ அதிக பிரியமுண்டு. ஊழ்வலியானன்றோ உலகுளோர் இங்ஙனம் கூறுவதற்கிடமாயிற்று. வெகுதூரமான வேரிடத்து தீயுட் பாய்ந்ததோர் வியப்புறு காட்சியை யுண்மையென நம்புவோர் யாரோ? சரி இதன்பொருட்டுச் செல்.

துர்:—அந்தோ! அரசி! (போதல்)

## ராமதாஸர் கடவுளைக் கண்டது.

ஸ்ரீமாந் V. R. சுந்தரராஜ சர்மா அவர்கள்.

---

சின்னாட்களுக்கு முன்னர் ராமதாஸ ரென்ற ஓர் வைணவ பக்தர் நம் நாட்டில் வசித்து வந்தனர். அவருக்குக் கடவுளைக் காணவேண்டு மென்ற அவா மேலிட்டிருந்தது. இப்படியிருக்கையில் ஒரு நாள் பிராமணர்களுக்கு விருந்தளித்துவிட்டு, ஒரு தோட்டத்தில் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அவ்வமயத்தில் பரம் பொருளைக் குறித்துப் பாடும் இனியபாவின் தொனி ஒரு பக்கத்தினின்றும் அவர் காதில் விழுந்தது. உடனே தன்னுடனிருந்த மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு, அவ்விடம் சென்று நோக்குங்கால், அவண் கபீர் தாஸரென்ற மற்றொரு பெரிய பக்திமான் வந்திருக்கக் கண்டு, அன்னவர்க்கு அடிபணிந்து, க்ஷேமம் விசாரித்தனர். அதன் பின்னர் தனக்கு யோகாப்பியாஸம் கற்பிக்குமாறு கபீரை வேண்ட அவரும் அதற்கு உடன்பட்டு அவ்விடத்திலேயே ராமதாஸரின் விருந்தினராகச் சிலகாலம் தங்கியிருந்தனர்.

ஒரு நாள் ராமதாஸர் கபீரிடம் சென்று தனக்கு கடவுளைக் காண கடாக்ஷித் தருளுமாறு பிரார்த்தித்தார். அவரும் அதற்கு உடன்பட்டு ஓர் தினத்தையும் குறிப்பிட்டு, மெய்யனை வரவேற்கும் பொருட்டு அன்று பிராமணர்களுக்கு ஓர் விருந்தளிக்குமாறு சொன்னார். குறித்த தினத்தில் விருந்திற்கு வேண்டிய யாவும் தயாரிக்கப் பட்டன. ஆகார பதார்த்தங்கள் மலைகள்போலக் குவிக்கப் பட்டிருந்தன. ராமதாஸர் வசித்து வந்த பத்ராசலம் என்ற நகரம் அன்று நன்றாய் அலங்கரிக்கப்பட்டு அழகாய் விளங்கிற்று. கணக்கில்லாத பிராமணர்கள் விருந்திற்கு வந்து, பகவானின் வருகையை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கடவுளின் வருகை பகல் பன்னிரண்டு மணிக்கென ஏற்படுத்தப் பட்டிருந்தது. ஆனால் மணிமூன்றும் அடித்துவிட்டது. ஆயினும்மெய்யனைக் காணவில்லை. ராமதாஸருக்கு கபீரின் மேல் சந்தேகம் ஏற்படத் தொடங்கிற்று. அந்தணர்களுக்கு பசியினால் கோபம் பொங்கியெழுகிய ஆரம்பித்தது.

இது இவ்விதமிருக்கையில், முழுதும் சேற்றால் பூசப்பெற்று, மிகவும் அசிங்கமான உடலோடு, ஒரு கொழுத்த எருமை அங்கு வந்து, அவ்விடத்திலுள்ள இனிய ஆகாரசாதனங்களில் உருளத் தொடங்கிற்று. நெய், தயிர், பால் முதலியவைகள் நிறைந்த குடங்களைத் தலைகீழாகக் கவிழ்த்துவிட்டது. பசியால் கோபம்நிறைந்த பார்ப்பனரும் மன வருத்தமுற்ற ராமதாஸரும், அந்த மிருகத்தைச் சூழ்ந்துகொண்டு, உதிரம் பெருகுமாறு அதை நன்றாய்ப்புடைத்து, அதன் உடலில் அநேகவிடங்களில் சூடிட்டு, வெளியே துரத்திவிட்டனர். விருந்தினிமித்தம் தயாரிக்கப் பட்ட பொருள்களெல்லாம் பாழாய் விட்டபடியால் புதிதாக விருந்து தயாரிக்கப் பட்டது. ஆனாலும் முன்போல அத்துணை நேர்த்தியாக விருக்கவில்லை. புரோகிதர்கள் ராமதாஸரைத் தூற்றிக்கொண்டு சென்றனர். என் செய்வார் பாவம்! ஒரு பக்கிரியால் ஏமாற்றப் பட்டு இவ்விதம் அவமானத்திற்காளானோமே என்று மிகுந்த வெட்கம் கொண்டார்.

அந்த எருமை நேராகக் கபீரிடம் செல்ல, அவர் அதன் மேலுள்ள வடுக்களையும், செந்நீர் வடிதலையும் கண்டு மனம் பொறாமல், அவற்றிற்கு மருந்து செய்துவிட்டு "அப்பனே! அப்பனே! இது தான் தங்களுக்கு அவ்விடத்தில் கிடைத்த மரியாதையோ" என மிக்க விசனத்துடன் வினவ, (எருமையுருவாகச் சென்றது பக்தவத்ஸலனே) பகவான் "உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுமாறு சென்றதற்கு ராமதாஸனளித்த வந்தனோபசாரமிதுவே ஆனால் இதற்காக நீ வருந்த வேண்டியதில்லை. இராவண ஸம்ஹார காலத்தில் என் தேகத்தில் பட்டவடுக்களுக்கு இதை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இது ஒன்றுமில்லை." எனக் கூறிவிட்டு மறைந்தருளினார். அன்று மாலையில் ராமதாஸர் சீற்ற மிக்க வதனத்துடன் கபீரிடம் வந்தார். ஆனால் நடந்தவற்றைக் கேட்டவுடன் அவருடைய கோபம் துக்கமாக மாறிவிட்டது. அதன் பின்னர் கபீர்தாஸர் ராமதாஸரை நோக்கி, கடவுள் சர்வ வியாபியென்றும், எல்லாம் அவருக்குள்ளாகவே அடங்கியிருக்கிறதென்றும்; அவருக்குப் புறமே கிடையாதென்றும் போதித்தருளினார். பரம்பொருள் எங்கும் நிறைந்தது.

வீ. ஆர் சுந்தரராஜ சர்மா.

---

We have much pleasure in publishing the following letter.

## NOTICE.

It is proposed to hold a meeting of the subscribers to His Highness the Maha Rajah's Shashtiabdapurti Celebration fund at 5 P. M. on Saturday the 28th July 1917/13th Karkadagom 1093 in the Victoria Jubilee Town Hall, Trivandrum, in order to settle finally the shape of the permanent memorial.

All subscribers interested in the matter are requested to be present.

P. RAMASWAMI AIYAR,
Joint Secretary,
Shashtiabdapurti Celebration,
Central Committee.

Trivandrum,
10th July 1917.

## SHASHTIPOORTI EXHIBITION HALL.

---

I wish to record my view that there cannot be a better permanent memorial of the auspicious Shashtyabdapoorti of our Royal Liege than the construction and maintenance in full vigour of a permanent Exhibition Hall in the heart of the town of Trivandrum. In *maintenance*, I include the capacity for meeting the charges of awarding medals, prizes and certificates to the successful exhibitors of agricultural, industrial, commerical and artistic articles.

The building may be made to supply accomodation for other public purposes also and it will then also partake of the nature of a big public Hall for Trivandrum. Nobody can deny that the growing needs of the capital of the state will not be satisfied by the Jubilee Hall alone.

There should be quarterly exhibitions in the institution and fees should be levied from exhibitors from outside Travancore. A standing committee of honorary workers and a permanent staff should be formed for the carrying out of the function thereof. In one decade, the results will be found to be enormous in magnitude and power for good. The exterior of the blocks should be made as attractive and grand as is the object in view.

C. N. ANANTARAMAIYA SASTRI.

## கும்பகோணம்.

ஸ்ரீமாந் P. V. ஜகதீசய்யர் அவர்கள்.

### பெயரின் காரணமும் அதன் பெருமையும்.

ஆதி காலத்தில், பிரளய காலத்தில், பிரம்மாவின் குடத்திலிருந்து ஏற்பட்ட ஸ்தலமானதால் இதற்குக் கும்பகோணம் என்று பெயர் உண்டாயிற்று. இதற்கு குடமூக்கு என்றும் பெயருண்டு. இந்த ஸ்தலத்தின் சுற்றிலும் அநேக விசேஷ சிவஸ்தலங்களும் விஷ்ணு ஸ்தலங்களும் ஏற்பட்டிருப்பதினாலும் இது காவேரி நதியின் கரையில் காச்யப தீர்த்தம் முதல் ஈசான தீர்த்தம் வரையில் உண்டான கட்டடங்களுடன் இருப்பதாலும் இது மற்றைய க்ஷேத்திரங்களைக் காட்டிலும் பிரதான்யம் பெற்றது.

மேலும் இந்த ஸ்தலத்தில் ப்ரம்மா, தேவர்கள் ஹோமரிஷி முதலியவர்களும் தங்கி பகவானை பூஜை செய்ததின் காரணமாய் இது விசேஷமாய் கொண்டாடப் படுகிறது.

### கும்பேச்வரர் கோவில்.

முதல் முதல் பிரளயம் உண்டாவதற்கு முன் ப்ரம்மா, ஈச்வரனை தான் எப்படி தன்னுடைய தொழிலைப் பாளயத்திலிருந்து காக்க முடியுமென்று பிரார்த்தித்தார். அதற்கு அவர் ஒரு திவ்ய க்ஷேத்ரத்திலுள்ள மண்ணால் செய்யப்பட்ட குடத்தில் அவருடைய எக்காலமும் அழியக்கூடாத ஸ்ருஷ்டி பீஜத்தை வைத்து அந்தக் குடத்தை மஹாமேருவின் உச்சியில் வைத்துவிடும்படி ஆக்ஞாபித்தார். அப்படிச்செய்தார். ஆனால் ப்ரளயத்தில் பூமிமுழுமையும் ஜலமாய்ப்போய் காற்று அடித்ததில் இந்தக்குடம் தெற்கு திக்கை நோக்கி ஓடிவந்து இந்தகும்பகோணத்திலுள்ள ஹோம புஷ்கரணி என்னும் குளத்தண்டை தங்கினது. பிறகு ஜலம் அடங்கினதும் பகவான் வேட ரூபமாய் தெற்கில் பிரவேசித்துக்கொண்டு போகையில் இவ்விடத்தில் குடம் தங்கி இருப்பதைப் பார்த்து பிரம்மாவை மறுபடியும் ஸ்ருஷ்டித்தொழிலை நடத்தும்படி செய்யவேண்டி அந்தக்குடத்தை உடைத்து அதிலிருந்த மணலை அமிர்தத்தோடு பிசைந்து அந்த ஸமயமாகிய மாசி மாதம் பௌர்ணமி தினம் பகல் வ்ருஷப லக்னத்தில் ஒரு லிங்க வடிவமாகச் செய்து உடைத்த குடத்தின்மேல் வைத்து அமிர்தத்தினால் அபிஷேகம், பூஜை முதலியன செய்து அதிலேயே தானும் அந்தர்த்யானமானார். ஆனதுபற்றியே இவருக்கு ஆதிகும்பேச்வரர் என்றும் ஸூர்யன் கும்பத்திலிருக்கும் வெள்ளிக்கிழமை அன்று அவ்விடத்தில் தோன்றிய ஈச்வரிக்கு மங்களாம்பாள் என்றும் பெயர் உண்டாயின.

இந்தப்படி கும்பேச்வரர் ஏற்பட்டது மன்னியில் அந்தக்குடத்தின் மேல் வைக்கப்பட்டிருந்த மற்றைய மங்களகரமான தேங்காய், மாவிலை, யக்ஞோபவீதம் புஷ்பம் இவைகளும் சிதறி குடத்தின் ஸமீபத்தில் பல இடங்களில் விழுந்தவுடன் அந்தந்த தெய்வத்தன்மை பொருந்த இந்த ஸாமான்களின் பேரில் பலபல மூர்த்திகள் ஸ்தாபிக்கப்பட்டு அவைகளும் இந்த முக்கியமான கும்பேச்வரரைச் சுற்றி ஏற்பட்ட பல கோயில்களாக விளங்கி வருகின்றன.

இப்படிப்பகவான் கும்பேச்வரலிங்கத்தில் அந்தர்த்யானமானதும் ப்ரம்மா தன்ஸ்ருஷ்டித்தொழிலை ஆரம்பித்து ஜனங்களை உண்டாக்கி அந்த விசேஷ மூர்த்திக்கு உத்ஸவம்செய்ய ஆரம்பித்தார். அந்தப்படி உத்ஸவம் செய்து ஈச்வரனிடத்தில் அவரை வந்து தரிசிக்கும் ஜனங்களுக்கும் தன்னால் உண்டாக்கப்பட்ட மஹா மஹக்குளத்தில் மாசிமாதத்தில் மஹ நக்ஷத்திரம் கூடின பௌர்ணமி தினத்தில் ஸ்நானம் செய்வோர்க்கும் நல்ல கதியைக் கொடுக்கும் படிக்கும், கார்த்திகை மாஸம் ஸோமவாரமும் மாசி மகமும் ப்ரஸித்தி பெறவும் வரன்களை அடைந்தார்.

### மஹா மஹக்குளமும் அதன் விசேஷமும்.

மேல் சொன்னபடி உத்ஸவம் செய்ய முக்கியமான தீர்த்தம் வேண்டிய நிமித்யம் மஹாமஹக் குளத்தை ஏற்படுத்தினார். இப்படி ப்ரம்மாவால் உண்டாக்கப்பட்ட குளத்திற்கு விசேஷம் உண்டாகும் பொருட்டு அந்தக் குளத்தில் கங்கை, யமுனை, ஸரஸ்வதி, நர்மதி, கோதாவரி, காவேரி, மஹாநதி, பயோஷ்ணி, ஸரயு ஆகிய 9 நதிகளும் இதில் வந்து சேர்ந்தன.

இந்த ஒன்பது முக்ய நதிகளும் ஒரு சமயம் கன்னிகைகள் உருவமெடுத்து கைலாஸத்தில் பார்வதியுடன் ப்ரகாசிக்கும் பரமசிவனிடம் சென்று எல்லா ஜனங்களும் ஸ்நானம் செய்து அவரவர்கள் செய்த பாபத்தை நாங்கள் வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறதே, அது எப்பொழுது எங்களிடமிருந்து விலகுமென்று ப்ரார்த்திக்க பகவான் அவர்களை அந்த தினமாகிய மாக மாதம் பௌர்ணமி திதியில் பகலில் வ்ருஷப லக்னத்தில் தனக்கும் அவ்விடத்தில் மகா ஸங்கராந்தி புண்யகாலத்தில் ஆவிர்பவித்த மஹா விஷ்ணுவுக்கும் பிரியமான கும்பகோணம் மஹாமகக் குளத்தில்போய் ஸ்நானம் செய்து அவர் பாபத்தை தீர்த்துக் கொள்ளும்படிக்கு ஆக்ஞாபித்தார். அந்தப்படியே அவர்கள் செய்தார்கள். இப்படிக்கு இவர்கள் கும்பகோணம் போவதற்கு வழிதெரியாதென்று பகவானிடம் தெரிவிக்க அவரும் அவர்கள் காசிபோய் இருந்தால் அவ்விடத்தில்தான் வந்துவிஸ்வநாதரென்ற பெயருடன்கூட அவர்களுடன் கும்பகோணம் வருவதாகவும் ஆனால் அவர்கள் தங்கள் சக்தியில் ஒரு பாதியை அந்தந்த நதியில் வைத்து மற்றையப் பாதியுடன் கும்பகோணம் வந்து தான் அவ்விடத்தில் மஹாமஹக் குளக்கரையில் ஆவிர்ப்பவிக்கும் விஸ்வநாதஸ்வாமி கோயிலிலேயே ஒன்பது பெண் உருவத்துடன் தங்கி இருக்கும்படி உத்தரவு செய்தார். இப்போதும் கும்பகோணத்தில் மஹாமஹக்குளம் வடமேற்குக் கரையில் விச்வநாதர் கோயிலில் இந்த ஒன்பது நதிகளும் கன்னிகைகளாக சிலா உருவத்துடன் இருப்பதைப் பார்க்கலாம்.

(இந்துநேசன்)